விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு சித்திரை மாதம் 28-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 16-ம் இலக்கம்

# தொழிலாளருக்கு மாதிரிகையான சூசையப்பர்

வைகாசிமாதம் 1-ந்திகதி மிகவும்அருமையான ஒருபெருநாள். அஃது தொழிலாளருக்கு மாதிரிகையான அர்ச். சூசையப்பரின் திருநாள். நாம் இத்திருமாதவனைத் திவ்வியயேசுவை வளர்த்த கைத்தாதையென்றும், கன்னிமரியம்மாளின் காவலரும், பரிபாலகருமென்றும்தான் அதிகமாகநினைக்கிறோம். அதனுல் யேசுவையும், மரியாயையும் பராமரிக்கும் பொறுப்பைக்கொண்டிருந்த அதிகம்பிரமாணிக்கமுள்ள ஊழியரென்றமட்டிலே அவரைநேசிக்கிறோம். அருமை பெருமை பாராட்டுகிறோம்.

அர்ச். சூசையப்பருக்கு மகா அருமையான பொறுப்புகள் இருந்தனஎன்பதுஉண்மையே. யேசுவும்,மரியாயும் அநேகவருடகாலம் சர்வேசுரனுல் அவரிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டிருந்தார்கள். சாதாரண குடும்பஸ்தன் ஒருவன் தனது அரியமனைவிமக்களுக்குச் செய்வதுபோலவே மரியாய்க்கும், யேசுவுக்கும் அர்ச். சூசையப்பர் சகலத்தையும் செய்துவந்தார். ஆனுல், அவர் எத்துணைபுனிதமாக அதைச்செய்தார்! தமதுதினசரிவாழ்க்கையிலே அதிகம்சாதாரணசெயல்முறைகளில்தானும் என்ன பெரும்கவனமும், அன்பும், கரிசனையும் காண்பித்தார்!

பரிசுத்தவேதாகமம்அவரை"நீதிமான்"என்று— அதாவது "அர்ச்சியசிட்டவர்" என்று அழைக்கின்றது. பரலோகத்திலே மரியாய்க்குப்பின் மாபெரும்அர்ச்சியசிட்டவரென்று சிலர்அவரைக் கொண்டாடுகின்றனர். ஆனுல், அவரோ நாமெல்லாம் கண்டு பாவிக்கவேண்டிய தலைசிறந்த முன்மாதிரிகையாய் விளங்குகின்றூர். அவரின்சீரியவாழ்க்கையிலே நாம்தியானிப்பதற்கும், கண்டுபாவிப்பதற்கும் எவ்வளவோசிறந்த அம்சங்கள்காணப்படுகின்றன. மறைந்தவாழ்க்கையினதும், அதிகம்சுத்தகருத்துடனும், அதிகம்தேவநேசத்துடனும் செய்யப்படும் சிறியகாரியங்களினதும் அர்ச்சியசிட்டவராக அவர்திகழ்கின்றூர்.

யேசுவுடனும், மரியாயுடனும் சீவிக்க அர்ச். சூசையப்பர் நமக்குப்படிப்பிக்கின்றூர். அவருடைய வாழ்க்கை தேவதிருக்குமாரனுடனும், அவரது திருத்தாயாருடனும் இடையீடின்றியே அதிகம் நீடிய தொடர்புடையதாயிருந்தது. அவரைக்காட்டிலும் யேசுவுடனும், மரியாயுடனும் அதிகம்நீண்டகாலம் சீவித்தவர் எவருமில்லை. அவரைக்காட்டிலும் யேசுவுடனும், மரியாயுடனும் அதிகம்நெருங்கியவிதமாய்ச் சம்பாஷித்தவரும், ஊடாடியவரும் வேறெவருமில்லை. அவர் வேலைசெய்யும் போதெல்லாம் "யேசுவுக்காகவே," "எல்லாம்யேசுவுக்காகவே" என்று சொல்லிக்கொள்வார். கடுமையாகஉழைக்கும்போது அவர்நெற்றியிலிருந்து வியர்வை வழிந்தோடும், களைமேலிடும். ஆனுல், முறையிடாது "எல்லாம் அவருக்காக—அவரின்திருத்தாயாருக்காக"என்று சிந்திக்கும்போது களைப்பும், வியர்வையும் காற்றுய்ப்பறந்துபோக அவர்வதனத்தில் ஆனந்தம்பொங்கும்.

ஆம், அவர் யேசுவுக்கும், மரியாய்க்குமாக உழைத்தார். அவர்களுக்காக— அவர்களுக்காக மாத்திரமே சீவித்தார். அவரைக் கண்டுபாவித்துத் தொழிலாளரானநாமும் வேலைசெய்யும் போது யேசுவுக்காக— யேசுவுக்கும், மரியாய்க்குமாகவென்று சுத்தகருத்துடன் உழைப்போம். அவர்களுக்காகச் செய்யும் பொழுது நமதுவேலை இன்பமும், பலனும் தருவதாயிருக்கும்.

**ஓ, நல்ல அர்ச். சூசையப்பரே! தொழிலாளரினதும், யேசுவையும், மரியாயையும் நேசிக்கிறவர்களினதும் மாதிரிகையானவரே, உம்மைக்கண்டுபாவிக்க என்னைப்படிப்பித்தருளும்.**




**நசரேத்தின் எளிய தொழிலாளியான அர்ச். சூசையப்பர் தேவனுடையவும், திருச்சபையினுடையவும் கண்களுக்குத் தொழிலினுடைய மகத்துவத்தை விளக்கும் அவதாரமாக மாத்திரமன்று, ஆனுல், எமது இல்லங்களினதும், குடும்பங்களினதும் விழிப்புள்ள காவலராயும் விளங்குகின்றூர்.**

# ஆபேலின் பலியும் ஆண்டவரின் பலியும்

'ஏதென்'எனும்சிங்காரத்தோப்பிலிருந்து ஆதாமும்,ஏவாளும் துரத்தப்பட்டபின் அதற்கு வெளியேவசிக்கத் தாங்களாகவே ஓர்இடத்தைக் கண்டுகொண்டார்கள். காலைமுதல்இராவரை அவர்கள் பாடுபட்டுழைத்துத் தங்களுக்கும், தங்கள்பிள்ளைகளுக்கும் சீவனுதாரத்தைத் தேடிக்கொண்டார்கள். அவர்களின்மூத்தபிள்ளை காயீன். இரண்டாவதுமகன் ஆபேலென்று அழைக்கப்பட்டான். காயீன்வளர்ந்தபோது அவன் ஒருகமக்காரனுனன். ஆபேல் ஓர் இடையனுகி மேய்ச்சல்தரைகள் எங்கெங்கு அதிகம்பசுமையாய் இருக்குமோ அங்கங்கெல்லாம் சுற்றித் தனதுமந்தைகளைப் பின்தொடர்ந்துசென்றூன்.

தங்கள்பாவத்தினுல் விளைத்த தீமைக்கு ஈடுசெய்வதற்கென்று இரட்சகர்ஒருவரை அனுப்பச் சர்வேசுரன் வாக்குப்பண்ணியதை ஆதாமும்,ஏவாளும் எப்போதும் நினைவில்கொண்டு தங்களால்கூடியமட்டும் அவரைத் தொடர்ந்து வழிபட்டுவணங்கிவந்தார்கள். அவருக்குப் பலிகள் செலுத்துமாறு தங்கள்பிள்ளைகளுக்குக் கற்பித்துவந்தார்கள்.

ஒருநாள் காயீனும்,ஆபேலும் பலிசெலுத்துதற்கென்று தங்கள் காணிக்கைகளைச் சித்தஞ்செய்தார்கள். காயீன் தன்னுடைய தானியங்களிலும், பழவர்க்கங்களிலும் சிலவற்றைச்சேகரித்து கல்லாலான ஒருபலிபீடத்தின் மேல் ஒருங்குசேர்த்துக் குவித்து வைத்தான். ஆபேல் தனது செம்மறியாட்டுக்குட்டிகளில் அதிகம்சிறந்ததைத்தெரிந்து தன்னுடையபலிபீடத்தின்மேல் வைத்தான்.

சர்வேசுரன் ஆபேலின்காணிக்கையை ஏற்றுக்கொண்டார். ஏனெனில், அது உதாரகுணமுள்ள ஓர்இருதயத்துடன் ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஆனுல், காயீன்செலுத்தினபலி அவருக்கு உவப்பாயிருக்கவில்லை. தனது காணிக்கையைச் சர்வேசுரன் ஏற்றுக்கொள்ளவில்லையென்று கண்டபோது அவன்கோபங்கொண்டான். அப்பால்சென்று கிலேசமடையத்தொடங்கினுன். ஆபேலில் அவன்கொண்ட பொறுமை வளர்ந்தது. வளர்ந்துகொண்டேவந்தது. ஈற்றில் தனதுசகோதரனை எவ்விதம் ஒழித்துக்கட்டலாமெனச் சதியாலோசனைசெய்யத்தொடங்கினுன்.

சிலகாலத்தின்பின் காயீன் தன்னுடையதம்பி ஆபேலை நோக்கி: "நாங்கள் வயலுக்குப் போவோம்வா"எனக்கூறினுன்.

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச்சனின் குமாரன்

(யேசுசபையைச் சேர்ந்த வண. எஸ். மொண்ரெய்ரோ சுவாமியார் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்)

தமதுபன்னிரண்டாம்வயதிலே ஜெருசலேம் தேவாலயத்திலிருந்து திவ்வியயேசு திரும்பியதும் ஏறக்குறையப் பதினெட்டுஆண்டுகளாக நசரேத்என்னும் சிறியகிராமத்தில் வசித்திருந்தார். அத்தனைவருடங்களிலும் அவர் என்னசெய்தார்? நாமெல்லாம் அறிந்துள்ளபடி அவர் வேலைசெய்துவரலானார். அவர் ஒரு இளைஞராயிருந்தபோது தம்முடைய திருத்தாயாருக்குத் துணைசெய்துவந்தார். அதாவது, கோதுமைஅரைப்பார். அடுப்பில் தீமூட்டுவார். நீரூற்றிலிருந்து குடங்களில் தண்ணீர்எடுத்துவருவார். தாயார்ஏவிய பணிகளையெல்லாம்செய்வார்.

அவர்வளர்ந்தபின் அர்ச். சூசையப்பர் அவருக்குத் தச்சுத்தொழிலில் முதற் பாடங்களைக் கற்றுக்கொடுத்திருப்பாரென்று சொல்லவேண்டியதில்லை. யூதர்கள் ஒருநல்லவழக்கத்தை என்றும்கடைப்பிடித்து வந்தார்கள். அவர்களில் ஒவ்வொருதகப்பன்மாரும் தங்கள்புதல்வருக்கு ஏதோஒரு தொழிலைப் பயிற்றவேண்டியிருந்தனர். அவர்கள்வழமையில் தங்கள்சொந்தத் தொழிலையே அவர்களுக்குப் பயிற்றிவந்தனர். யூதர்கள் சகலதொழில்களையுமே கண்ணியமாக மதித்துவந்தார்கள். அவர்களில் பெரியசெல்வந்தர்கள் தானும் சீவனத்துக்காக உழைக்கவேண்டிய ஏதோஒருதொழிலை அறிந்திருந்தார்கள.

ஆனால், அக்காலத்தில் ரோமர்களைப் போல வேறுபேர்களும் இருந்தார்கள். இவர்கள் வேலையை — தொழில்செய்வதை இழிவென்றும், தாழ்வென்றும், ஈனமென்றும் கருதினார்கள். கைவேலைகளெல்லாம் தங்கள் அடிமைகளால் செய்யப்படவேண்டுமென்று விட்டுவந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அடிமைகள் வெறும்கருவிகளாய் இருந்தார்கள். அவர்கள் வறிய அடிமைகளை அலட்சியம்பண்ணினார்கள். அடக்கி யொடுக்கி வருத்தினார்கள். இவ்விதம் நினைப்பது ஒருதவறென்று காண்பிக்கத் தேவன்விரும்பினார். ஆகவே, அவர் ஒருதொழிலாளியின் குடும்பத்தில் பிறந்தார். ஒருதச்சனின்தொழிலைச் செய்வதில் அநேகவருடங்களைச் செலவிட்டார். தொழில் மேன்மையானது. திவ்வியமானது. தேவன்தாமே ஏன் அதைச்செய்தாரென்பது இதனால்தான்.

நசரேத்திலுள்ள மனையை அடுத்து ஒருசிறிய தொழிற்சாலை. அதிலே சில மரக்குற்றிகளும், கனத்தபலகைகளும் இருந்தன. அதன்மூலைஒன்றில் ஒரு சோடிகோடரிகளும், ஓர்அரிவாளும், சிலஉளிகள், சீவுளிகள், சுத்தியல்கள், மற்றும்ஆயுதங்களைக்கொண்ட ஒரு பெட்டியும்இருந்தன. அந்தத்தொழிற்சாலையில் காணப்பட்டதெல்லாம் அநேகமாய்இவைகளே. திவ்வியயேசு ஒவ்வொருகாலமேயும் அங்குசென்றார். ஆரம்பத்தில்அவர் மரம்அரிந்தும், அரிந்தெடுத்தபலகையை ஒப்பமாக்கியும், அதிலே துளைகள்இட்டும், நிலத்தைத் துப்புரவுபண்ணியும், மற்றும் இவைபோன்றவைகளைச்செய்தும் சூசையப்பருக்கு உதவியாயிருந்தார்.

பிந்தயேசுதாமே திறமைவாய்ந்த ஓர்தச்சராயினார். அதன்மேல் அவரும், சூசையப்பரும ஒன்றுசேர்ந்துவேலை செய்து அதிகபணம் உழைத்தனர். கலப்பைகளையும், நுகங்களையும், தொட்டில்களையும், வாங்குகளையும், மற்றும்அயலிலுள்ள கமக்காரருக்குத் தேவைப்படும் யாவற்றையும் அவர்கள் செய்துகொடுத்தார்கள். சிலவேளைகளிலே கூரைகளைப் பழுதுபார்க்கவோ, அன்றேல் சுவரிலேஅலுமாரிகளைப் பொருத்தவோ பிறவீடுகளுக்குச் செல்வார்கள், கடுமையாகஉழைக்கும் இளம்தச்சுத்தொழிலாளியை அறிந்தவர்கள் அவருடைய வசீகரமான ஒழுக்கவழக்கத்தையிட்டுப் பெரிதும் ஆச்சரியமடைவார்கள். பொறுமையாயும், அயராமுயற்சியாயும், பிறருக்குப்பணிசெய்ய என்றுமே தயாராயும், தமதுவாடிக்கைகாரர்மட்டில் அனுதாபமாயும், பெருந்தன்மையாயும் அவர் இருந்துவந்தார். அவர்களும் அவரது சிறந்த ஒழுக்க மேம்பாட்டையும், வசீகரமான குணாதிசயங்களையும், கனிவான பேச்சுகளையும், பெருந்தன்மையான போக்கையும் புகழ்ந்து பாராட்டிவந்தார்கள். ஆனால், அவர் தேவனாயிருப்பாரோவென்று அவர்கள் ஒருபோதுமே ஐயுறவுகொள்ளவில்லை.

வானத்தையும், பூமியையும் ஒரே தனிவாக்கால் சிருட்டித்த அதே தேவன்தானே அலட்சியஞ்செய்யப்பட்ட ஒருகிராமத்தின் தொழிற்சாலை ஒன்றில் கரடுமுரடான மரக்குற்றிகள் மீது வியர்வைசொட்ட வேலைசெய்வது ஆச்சரியமாயிராதா? அதுவும் எத்தனைவருடகாலம்? இதன் அர்த்தமென்ன? அவருடைய பரமபிதாவின் சித்தமாயிருந்தபடியால்தான் அப்படியெல்லாம அவர் வேலைசெய்தார். அப்போது ஜெருசலேம்தேவாலயத்தில் அவர் பின்தங்கியதை நாம்அறிவோம். ஏன்? ஏனெனில், அவருடைய பரமபிதா அதைவிரும்பினார். இப்போது திரும்பவும் அதேபடிப்பனையை அவர்நமக்குப் படிப்பிக்கின்றார். அவர் வேலைசெய்கிறார். அதைச் செய்யவேண்டுமென்று அவருடைய பரமபிதா ஆசிக்கின்றார்.

நமதுவேலையும் தேவனால் குறிக்கப்பட்டது. ஒவ்வொருவேலையும் ஏதோ ஒருதேவையைப் பூர்த்திசெய்கின்றது. மனிதரிடையே பல்வேறு தேவைகளை உண்டுபண்ணியதேவன் பல்வேறு வேலைகளுக்குரிய திறமைகளையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றார். ஒவ்வொருவேலையுமே பயன்தருவதும, அவசியமுமானது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அர்ச். சூசையப்பரின் அந்தரங்க வாழ்க்கை

ஆசிரியர் எம். அந்தோனிப்பிள்ளை, பி. ஏ.

அர்ச். சூசையப்பர் தமதுவாழ்நாள் முழுவதும் மறைந்தவாழ்க்கை நடத்திவந்தார். அவர்யூதாகோத்திரத்தின் அரசர்பரம்பரையைச் சேர்ந்தவராயிருந்தும் உலகபெருமைசிலாக்கியங்களை அறவேவெறுத்துத் தாழ்மையும், அடக்கமுமான, வாழ்க்கைநடத்திவந்தார். எளியதச்சுத்தொழிலையே தமது சீவனோபாயத்தொழிலாகக் கைக்கொண்டார். அன்றையஉலகம் அவரைக்கண்ணியமிக்க மனிதராக ஏற்றுக்கொள்ளாதிருந்தும் தேவாதிதேவனுடைய கண்களிலே அவர் பெரியநீதிமானகக் காணப்பட்டார். அதனால் அவர் நீதிமானைசூசையப்பரைத் தமதுஏககுமாரன் யேசுநாதருக்குக் கைத்தாதையாகவும், தமது குமாரத்தியாகிய கன்னிமரியம்மாளுக்குப் பொருத்தமான பத்தாவாகவுந் தெரிந்தெடுத்தார்.

அர்ச். சூசையப்பர் திருக்குடும்பத்தின் தலைவரென்றபொறுப்பை ஏற்குமுன்னும், ஏற்றபின்னும் அந்தரங்க வாழ்க்கை நடத்தினார். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட திருக்குடும்பத்தின் மட்டில் தமக்குள்ளகடமையைப் பிரமாணிக்கமாகச்செய்துவந்தார் அவர்பட்டணங்களிலும், நகரங்களிலும் உல்லாசவாழ்க்கை நடத்தியவர் அல்லர். அவசியமின்றி உலகமக்களோடு தொடர்பூண்டவரும அல்லர். செசார்அரசனின் கட்டளைக்கு அமைந்து தம்முடையவும், கன்னிமரியாயுடையவும் பெயர்களைப்பதிவுசெய்வதற்காகப் பெத்லகேம்நகருக்குப் போனார். சம்மனசானவரின் கட்டளைக்கமைந்து கன்னிமரியாயையும், குழந்தையேசுவையும் ஏரோதனின் சதியில்நின்று காப்பாற்றுவதற்காக எகிப்துதேசத்துக்குப் போனார். தேவ வழிபாடுகளுக்காக ஜெருசலேம்தேவாலயத்துக்குப் போய்வந்தார். அதன் மேல் தமதுமரணபரியந்தம் நசரேத்தூரில் தமதுகுடும்பத்தோடு சீவித்துவந்தார். நசரேத்தூரில் சீவித்தகாலமெல்லாம் மதுரகுணத்தோடும், மவுனத்தோடும் யேசுவுக்காகவும், யேசுவோடும் தமது அந்தஸ்திலகடமைகளைச் சுமுத்திரையாய் நிறைவேற்றிவந்தார். புண்ணியசாங்கோபாங்கத்திற்கு அந்தரங்கசீவியத்தின் அவசியத்தைஉணர்ந்து மேற்கொண்டார்.

அர்ச். சூசையப்பர் தமதுவாழ்நாள் முழுவதும் மவுனவிரதம பூண்டிருந்தார். தாம்தேவசுதனின் கைத்தாதை என்பதையும், பரலோகஇராக்கினியாகிய கனனிமரியாயின் பத்தாஎன்பதையும் நன்குஅறிந்திருந்தார். அப்படியிருந்தும் இவைகளைப்பற்றி எவருடனும்பேசவுமில்லை, பெருமைப்படவுமில்லை. அவன்தேவசுதனின் புதுமையானபிறப்பைக் கண்ணாரக்கண்டிருந்தார். கன்னிமரியாய் பெற்றெடுத்த குழந்தை தேவசுதன்எனச் சம்மனசானவரால் அறிவிக்கப்பட்டிருந்தார்.



மூவரசர்கள்வந்து தேவகுழந்தையை ஆராதித்தார்கள். சிமியோன் தேவாலயத்தில் திருக்குழந்தையைத் தேவகுமாரன்என வாழ்த்தியதையும், ஆனாள்என்னும்விதவை அத்திருக்குழந்தையைத் தேவசுதனெனப் பாராட்டியதையும்காதாரக்கேட்டிருந்தும் அவர் இவைகளைப்பற்றி எவருக்குஞ் சொல்லாது தமதுமரணபரியந்தம் மவுனங்காத்துவந்தார்.

உலகமக்கள் தங்கள்பிள்ளைகளைப் புகழ்ந்து பெருமைப்படுவார்கள். இல்லாதவைகளையும்புழுகிப் பெருமை பாராட்டுவார்கள். தாங்கள் புராதனப் பெருமைவாய்ந்தவர்களெனச் சொல்லித் தங்களை மகிமைப்படுத்துவார்கள். ஆனால், அர்ச். சூசையப்பர் உலகமுழுவதும அதிசயித்து அடிபணிந்து வணங்கப்படக்கூடியவர்கள் இருவருக்குத்தாம் தலைவராயிருந்ததை நன்கறிந்தும் அதைப்பற்றி எவருடனும் பேசாமலும் பெருமைகொள்ளாமலும் மவுனம்நிறைந்த அந்தரங்கவாழ்க்கை நடத்தினார்.

அர்ச். சூசையப்பரில் விளங்கிய இத்தகைய சிறந்தபுண்ணியங்களின் காரணமாகத் தேவன் அவரைத் தமது வீட்டின் எசமானக இவ்வுலகில் தெரிந்தெடுத்தார். பரலோகத்திலும் அர்ச். கன்னிமரியாய்க்கு அடுத்தபடியாகப் பெரிய அர்ச்சியசிஷ்டவராகக் கொண்டாடப்பட்டு வருகிறார்.

ஆதலால் அர்ச். சூசையப்பரைப் பாதுகாவலராகக் கொண்டிருக்கும் கத்தோலிக்க தொழிலாளர்களாகிய நாமும் புனிதவளனாரின் சுகிர்த மாதிரிகைகளாகிய தாழ்மை, மவுனம், நிறைந்த தேவதிருவுளத்திற்குப் பணிந்த அந்தரங்கசீவியம் ஆதியனவற்றைக்கண்டுபாவிப்போமாக.

---


இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

---

திரு. ஜி. யோசவ் பொன்ராசா
அவர்களின்

## அமரதின நினைவு
3-ம் ஆண்டு



தோற்றம்: 4-5-1921 மறைவு: 4-5-1957

"வற்றாதஅருளின் ஊற்றாயிருக்கிற வல்லமை பொருந்திய யேசுவே! தேவரீருடைய சரீர சத்துவமும், இருதயபலமும் அற்றுப்போய்த் திருத்தலைசாய்ந்து எல்லாம் நிறைவேறிற்றென்று திருவுளம்பற்றின பொழுது நீர்அனுபவித்த கஸ்தியைப்பார்த்து யோசவ் பொன்ராசாவின் ஆத்துமத்தின்பேரில் இரக்கமாயிரும்."

மண்ணினின்று மறைந்தும் எங்கள் எண்ணம்விட்டு அகலாத எமது குடும்பத்தின் அணையா ஜோதியும், மதிப்பிற்கும், அன்பிற்குமுரிய எனது நேசப்பத்தாவும், எங்கள் அன்புத் தந்தையருமாகிய திரு. ஜி. யோசவ் பொன்ராசா அவர்கள் அமரத்துவமடைந்த மூன்றாம் ஆண்டு 1960-ம் வருடம் வைகாசி மாதம் 4-ந் திகதி புதன் கிழமை பூர்த்தியாகிறது. அன்று காலை 6-15 மணிக்கு அன்னவரின் ஆன்ம சாந்திக்காக ஆசனக்கோவிலிலே ஒரு துக்கப்பூசை நடந்தேறும்.

இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். கன்னியாஸ்திரிமார், சகோதர சகோதரிகள், பந்துமித்திரர்சகலரும் கத்தோலிக்க கிறிஸ்துவ கருணையோடு இவ்வாத்தும சாந்திக்காக வேண்டிக்கொள்ளத் தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மனைவி: திருமதி யெஸ்சி மேரி யோசவ்வின் யோசவ்

மக்கள்

ஆன் கத்தறின் ஐடா யோசவ், அன்ரன் புஷ்பராசா யோசவ்,
மேரி கில்டா யோசவ் பிரான்சீஸ் வலன்ரைன் றபின்றராசா யோசவ்
பிரான்சிஸ்கா யெனற் லிண்டா யோசவ்

4, மருதடி லேன், றக்கா றேட்,
நல்லூர் தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தரங்க கருதினல்மார்கள்

அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்திலே சென்றபங்குனி மாதம் 31-ந்திகதியன்று அருளப்பபாப்பரசர் நவமாக ஆக்கப்பெற்ற கருதினல்மார் எண்மரது சிரசுகளின்மேல் சிவப்புவர்ணத் தலைச்சீராக்களை வைத்தபோது பெயர்வெளிவராத மூன்றுபுதியகருதினல்மார் அங்கு சமுகங்கொடுத்திருக்கவில்லை. முதலாவது ஆபிரிக்க, ஜப்பானிய, பிலிப்பினியரான மூவரும், இத்தாலியரான மூவரும், பிரான்ஸியர் ஒருவரும், டச்சுக்காரர் ஒருவருமாக எட்டுப்புதிய கருதினல்மாரும் 37கருதினல்மார் கூடியிருந்தசமுகத்திலே பாப்பரசர் முன்பாகச் சாஷ்டாங்கமாக விழுந்தபோதுதான் மூன்றுபுதிய கருதினல்மார் அங்கில்லாதிருக்கக் காணப்பட்டனர். இந்தமூன்று கருதினல்மாரினதும் நாமங்களைப் பாப்பரசர் தக்கசந்தர்ப்பம் வரும்போதுதான் வெளியிடுவார். தற்போது பெயர்வெளிவராத இந்த மூன்று கருதினல்மாருக்கும் தானும் அவர்கள் கருதினல்பதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பது தெரியவராது. தாங்கள் நவமாக ஆக்கும் கருதினல்மாரின் நாமங்களைப் பாப்பரசர்கள் அந்தரங்கமாகவைத்திருப்பது பண்டுதொட்டுள்ள ஒருபுராதன வழக்கமாகும். கடைசிமுறையாக 1933-ம் ஆண்டு 11-ம்பத்திநாத பாப்பானவர் இந்தவிதமாகவே கருதினல் தெடெஸ்சினி ஆண்டவரின் நாமத்தை அந்தரங்கமாக வைத்திருந்தார். புதியகருதினல்மார் மூவரினதும்நாமங்கள் வெளிவராதபோதிலும் அவர்களுடன் சேர்த்துத் திருச்சபையில்முன்னில்லாத பெருந்தொகையினராய் இன்று 88கருதினல்மார் இருக்கின்றார்கள்.

---

## ஆபிரிக்கான முதலாவது கருதினல்

ஆபிரிக்கரும், காப்பிரியரான முதலாவது கருதினலுமாகிய றுகம்ப்வா ஆண்டவரும், ஆபிரிக்க குருமாரும், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாரும், குருத்துவமாணவருமான ஒருபெருங்குழுவினரும் அன்று ஞாயிற்றுக்கிழமைமாலை பாப்பரசரால் நல்வரவேற்று விசேஷ பேட்டி ஒன்று அருளப்பட்டபோது அங்குபெருமகிழ்ச்சி ஏற்படலாயிற்று. கருதினல் ஆண்டவருடன் சுதேச குருமாருக்குரிய அப்போஸ்தலரான அர்ச். இராயப்பரின் பாப்பரசர்சபைச் செயலாளர் மொன்சிஞ்ஞோர் மஸ்ஸாசுவாமிகளும், புதியகருதினல் ஆண்டவர் சமீபகாலத்தில் தானே ஒருமாணவராயிருந்த அர்ச். இராயப்பர் குருமடத்தின் சிரேஷ்டர்களும், மாணவர்களும், விசுவாசப்பரப்புதற்சபைக் குருமடத்தைச்சேர்ந்த ஆபிரிக்க மாணவர்களும் சென்றிருந்தார்கள். அவ்வேளை பரிசுத்தபிதா பேசியபோது, மிஷன்களுக்கு உதவிசெய்கின்ற பாப்பரசரின் சபைகள் ஆற்றிவரும்தொண்டுகளை அழுத்தமாகவும், சிறப்பாகவும் எடுத்துக் கூறித் தாம் அச்சபைகளுடன் நெருங்கியதொடர்புடையவராயிருப்பதாகத் தெரிவித்து எல்லோருக்கும் தமது ஆசீர்வாதம் அருளினர்.

## சற்பிரசாத மகாநாட்டிற்குப் பாப்பரசரின் பிரதிநிதி

ஜேர்மனியிலே மூனிச்நகரில் நடந்தேறவிருக்கின்ற சர்வதேச சற்பிரசாத மகாநாட்டிற்குத் தமதுபிரதிநிதியாக 73வயதுடையவரான கருதினல் ரெஸ்ரா ஆண்டவரை அருளப்பபாப்பரசர் நியமனஞ்செய்திருக்கின்றார். கருதினல் ரெஸ்ரா ஆண்டவர் சென்ற மார்கழிமாதம் கருதினல்பதவிக்கு உயர்த்தப்படுகிற வரையிலே சுவிற்சர்லாந்தில் பாப்பரசரின் ஸ்தானிகராய் இருந்துவந்தார். அருளப்ப பாப்பரசரைப்போலவே இவரும் பெர்காமோ மேற்றிராசனத்தில் பிறந்தவர். அவரைப்போலவே அங்குள்ள குருமடத்தில் ஆசிரியராயிருந்தவர். தமது சுயபாஷையாகிய இத்தாலிய பாஷையைத்தவிர ஆங்கில, பிரான்ஸிய, ஜேர்மனியபாஷைகளையும் நன்கறிந்தவர். பவேரியாவின் தலைப்பட்டணமாகிய மூனிச்நகரில் வருகிற ஆடிமாதம் 31-ந்திகதியன்று ஆரம்பமாகவிருக்கின்ற இந்தமகாநாட்டுக்குச் சமுகமளிக்கும் எண்ணத்தை 20கருதினல்மாரும், 192 அதிமேற்றிராணிமாரும் ஏற்கனவே தெரிவித்துள்ளார்கள். கருதினல்மாரில் பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கிருசியாஸ் ஆண்டவரும் அடங்குவார். இத்தாலியிலிருந்துமாத்திரம் மேற்றிராணிமாரும், அதிமேற்றிராணிமாருமாக 70பேர்வரை செல்லவிருக்கின்றார்கள்.

---

## பாப்பரசரின் விருந்தாடிகளான ஸ்பானிய குடும்பத்தினர்

அருளப்பபாப்பரசர் அன்று சனிக்கிழமை பார்சலோனநகரைச்சேர்ந்த ஸ்பானியகுடும்பம் ஒன்றை வரவேற்று, அவர்களுக்கு ஓர்பிரத்தியேகபேட்டி அருளலாயினர். அவர் சிலவருடங்களின்முன் ஸ்பானியதேசத்துக்கு விஜயஞ்செய்திருந்தபோது இவர்களின் விருந்தாடியாய் இருந்துவரலானர். செனியோர் இக்னசியோ விடால்அவர்களுக்கும், அவர்பாரியாருக்கும், பதினொரு பிள்ளைகளுக்கும்மகிழ்ச்சிபொங்க நல்வரவுகூறினர். பிள்ளைகளில் நால்வர் தங்கள் மனைவியர்களுடனும், நிச்சயார்த்தம் செய்யப்பெற்ற மணமகள், மணமகனுடனும் வந்திருந்தார்கள். சிறியபிரயாணரதம் ஒன்று இந்தக்குடும்பத்தை றோமைநகர்கொண்டு வந்து சேர்த்தது. அந்தநாட்களில்செய்த விருந்தோபசாரத்திற்காகப் பாப்பரசர் அவர்களுக்கு நன்றிதெரிவித்து, ஸ்பெயினுக்குத் தம்முடைய தரிசனையின் பழையநினைவுகளை அத்தருணம் ஞாபகத்தில் கொண்டுவரலாயினர்.

---

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நத்தால்நாட்டில் ஆறேஆறு பேருக்கு மாத்திரம் போதிய ஆசன வசதியைக் கொண்ட சின்னஞ்சிறிய ஒருகத்தோலிக்ககோவில் இருந்துவருகிறது. இது 20அடிநீளமும், 12அடிஅகலமும் உள்ளது. அழகுற நிர்மாணிக்கப்பட்ட சன்னல்களையும், சிற்றுருவான பலிபீடம் ஒன்றையும் [illegible] கிறது.

## கேரளநாட்டின் ஞானமணிவிளக்கு — சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரி

அப்போது திருவாங்கூர் இராச்சியத்தில் அடங்கியிருந்ததும், தற்போது கேரளஇராச்சியத்தின் ஒருபகுதியாய் இருந்துவருவதுமான கோட்டையத்துக்குச் சமீபமாயுள்ள குடமலூர் எனும் கிராமத்தில் 1910-ம்ஆண்டு ஆவணிமாதம் 19-ந்திகதியன்று சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரி பிறந்தாள். அதனுல் அவள்பிறந்த 50-வது வருட நிறைவுப் பொன்யூபிலிவிழா நிகழும்1960-ம்ஆண்டு ஆவணி மாதம்19-ந்திகதி வருகின்றது. இந்தயூபிலிவிழா அகிலமுழுவதும் பரந்துள்ள பெருந்திரளான அவளின் தாசர்களுக்கெல்லாம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

முந்த ஒருலௌகிகவாசியும், பிந்த ஒருகன்னியாஸ்திரியாய்த் துறவறவாசியுமாகப் பூவுலகில் தனது 36வருடகால வாழ்க்கையிலும் அசாதாரணவழியிலே சாதாரணகாரியங்களைச் சாதித்துவந்து, நீண்டகாலம் தன்னைப் பீடித்துவருத்திய நோய்காரணமாக நெடுநாள் தொடர்ந்துஅனுபவித்த வேதஉபத்திரவங்களால் ஈட்டிக்கொண்ட புண்ணியங்கள், பேறுபலன்களால் நிரம்பப்பெற்று 1946-ம்ஆண்டு ஆடிமாதம் 28-ந்திகதியன்றுபாரணங்கானம் எனுமிடத்திலுள்ள கிளாரம்மாள்மடத்தில் சங். அல்போன்ஸாகன்னியாஸ்திரி மரணமடைந்தாள். பரிசுத்தமும், பரித்தியாகமும், முன்மாதிரிகையுமான வாழ்க்கைநடத்தியபடியால் அவள் பரிசுத்தம்பரிமளிக்க மரித்தாள். இந்தச்சுகந்த பரிமளம் காலதாமதமின்றியே நாட்டின் நாலாகோணங்களிலும்பரந்து, ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களைப் பாரணங்கான விசாரணைப் பங்குச் சேமக்காலையிலுள்ள அவளுடையகல்லறைக்கு ஈர்ந்துகொள்ளத்தொடங்கவே அதுவரை பிரசித்தமற்றிருந்த அக்கிராமம் சகலசாகியத்தினர், சமயத்தினருமான யாத்திரிகர்களின் பிரஸ்தாபம்பெற்ற யாத்திரைத்தலமாக இன்று காட்சியளிக்கின்றது.

1946-ம்ஆண்டு அவள்மரணமடைந்ததுமுதலே பக்தர்கள் அவள்கல்லறைக்குச் சரியத்தொடங்கினார்கள். இன்னுமே குறைவில்லாமலும், சாகியபேதமோ, சமயபேதமோ, நிலைபரபேதமோ இல்லாமலும் தொடர்ந்து சரிந்தவண்ணமிருக்கிறார்கள். அவளுடையகல்லறையிலே திவ்விய பூசை நிறைவேற்றியவர்களில் கருதினல்மார், அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், பல்லாயிரக்கணக்கான குருமார் இருக்கிறார்கள். அவளுடையகல்லறையைத் தரிசித்தவர்களில் திருச்சபையின் இளவரசர்களும், இராச்சியங்களின் இளவரசர்களும், மந்திரிகளும், பாராளுமன்ற அங்கத்தவர்களும், சட்டசபைகளின் அங்கத்தவர்களும், உயர்நீதிமன்றங்களின் நீதியரசர்களும், அரசாங்க உயர்தரஅதிகாரிகளும், சனத்தலைவர்களும், மற்றும்பல்வேறு பதவிகளிலுள்ள பல்லாயிரக்கணக்கானவர்களும் இருக்கிறார்கள்.

சங். அல்போன்ஸா மூலம் அடைந்துகொண்டதாகத் தபால்மூலம் அறிவிக்கப்பட்டவைகளும், பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்து அறிக்கையிடப்பட்டவைகளுமான அநேகாநேக சலுகைகளைத்தவிர, ஆறுயிரத்துக்கு மேற்பட்ட சலுகைகள் பாரணங்கானத்திலேயே நேர்முகஅறிக்கையிடப்பட்டிருக்கின்றன. தொழுநோயென அறியப்படும் குஷ்டம், செவிடு, குருடு, அவயவங்களிலே பிறவிமுதலுள்ள அந்தசந்தக்கேடு ஆதியன குணமானதுபோன்ற சலுகைகள்பற்றிய இடையறாத அறிக்கைகள் பத்திரிகைகளிலே வெளிவந்துகொண்டிருந்ததும், நாடுமுழுவதும் அவைகள் எதிரொலியாகப் பிரதிபலித்துக்கொண்டிருந்ததும், றோமாபுரிக்குத்தானும் எட்டவே, அதனுல் கீழைத்தேச திருச்சபைத் திருச்சங்கத்தின் தலைவரான கருதினல் ஆண்டவர் அவளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படும் விஷயமாய் அறிக்கையான சம்பவங்களைப்பற்றிய விசாரணையைத் தொடக்குமாறு பாலாய்நகர் மேற்றிராணியாரைக் கேட்டுக்கொண்டார்.

மேற்றிராணியாண்டவரும் வழமைக்குமாறானதன்மையிலே நிகழ்ந்துள்ள காரியங்களில் திருப்தியடைந்தவராய்ப் பொதுமக்களால் ஆசிக்கப்பட்டபடி மூன்று குருமாரை மூன்றுநீதிபதிகளாகக் கொண்ட முதல்நீதிமன்றத்தை நிறுவினார். இதன்ஆரம்பத்திற்கு முன்சொன்ன கருதினல்தலைவரான ஈயூஜின் திசரான் ஆண்டகையவர்களே பாரணங்கானத்தில் சமுகமளித்திருந்தார். பல்வேறுவிசாரணைகள்சம்பந்தமாய் ஒன்றின்பின்னொன்றாக நிறுவப்பட்ட மூன்று நீதிபதிமன்றங்களும் தங்கள் விசாரணைகளை முடித்துவிட்டன. அதனுல் விசாரணைகள்பற்றிய விபரங்கள் நிகழும்1960-ம்ஆண்டு முடிவாகுமுன் றோமாபுரிக்குச் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அங்ஙனம் சமர்ப்பிக்கப்பட்டதும், முத்திப்பேறுபெற்றபட்ட விசாரணையைத் தீவிரப்படுத்துமாறு பரிசுத்த பாப்பரசரைக்கேட்கும்விண்ணப்பங்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள பிரபலஸ்தர்கள், பிரபலஸ்தாபனங்களிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றன. மூன்று நீதிமன்றங்களும் எல்லாமாகச் சுமார் 120சாட்சியங்களைச் சுமார் 690கூட்டங்களிலே விசாரணை செய்திருக்கின்றன. ஏற்கனவே விசாரணைசெய்யப்பட்டுள்ள மூன்றுபுதுமைகள் உட்பட ஏறக்குறையப் 10,000பக்கங்களில் சாட்சியங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன.

---

திவ்விய வார்த்தையானவர்சபையென அறியப்படுகின்ற மிஷனரிய சபையானது ஒல்லாந்திலே ஸ்ரெயில் எனுமிடத்தில் பாவனையின்றி கைவிடப்பட்டிருந்த ஒரு தவறணையிலே இற்றைக்கு 80 வருடங்களின்முன் வண. ஆர்னல்ட் ஜான்சென் சுவாமியாரால் அடியிடப்படலாயிற்று. தற்போது இச்சபையைச் சேர்ந்தவர்களாய் 5,000 பேருக்குமேல் இருந்துவருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரைமாதம்

**பொதுக்கருத்து:** குருமார் தங்கள் திருத்தொண்டுக்கடுத்த காரியங்களில் திவ்விய இஸ்பிரீத்துச்சாந்துவின் வரப்பிரசாதத்தை அதிகமாகப் பெற்றுப் பலமடையும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன்கருத்து:** தீய பிரசுரங்களினுல் வேதபோதக நாடுகளில் விளையும் ஆபத்துகளை வெற்றியளிக்கும் முறையில் கத்தோலிக்கர் எதிர்க்கும் படியாக மன்ருடிக்கொள்வது.

* * *

### காலையில்
### ஒப்புக்கொடுக்கும் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.


சத்திய வேத
# பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
சித்திரைமாதம் 28-ந் திகதி


## மேதினமும் மேமாதமும்

தொழிலாளியான அர்ச். சூசையப்பர்திருநாளுடன் மேமாதம் — அதாவது மாதாவின் வணக்கமாதம் தொடங்குகின்றது. பல்லாண்டுகளாகவே மேமாதம் மாதாவின் வணக்கமாதமாகக் கொண்டாடப்படுகிறது- ஆனல், 1955-ம் ஆண்டு முதல் மேமாதம்1-ந்திகதி தொழிலாளியான அர்ச். சூசையப்பர் திருநாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இது தற்செயலாக ஏற்பட்ட ஒருஉடன்நிகழ்ச்சி அன்று. ஏனெனில், தேவன் தற்செயலாக ஏதொன்றையுமே செய்கிறவர் அன்று. அர்ச். சூசையப்பர் திருக்குடும்பத்தின் தலைவராய் இருப்பதுபோல் மாதாவின் வணக்கமாதத்துக்கும் திருநாள்ஒன்ருல்அவர் தலைமை தாங்கவேண்டுமென்பது தேவ திருவுளமாயிற்றுபோலும்.

தேவதாயாரின் வெளியரங்க வாழ்க்கை ஒருசாதாரண குடும்பஸ்திரியின் வாழ்க்கையை ஒத்திருந்தது. எல்லாத்துக்கும் மேலாகச் சூசைமாதவனின் திருப்பத்தினியாகவும், யேசுக்கிறீஸ்துநாதரின் திருமாதாவாகவும்இருந்து அவர்செய்துவந்த வீட்டுப்பணிவிடைகள் அவரின் பரிசுத்ததனத்தைப் பிரதிபலித்துவந்தன. தேவசுதனின் திருத்தாயாராயிருந்தும் சாதாரண வீட்டுவேலைகளைத் தாம்செய்வது இழிவென்று அவர்ஒருபோதுமே கருதாது தமதுநாளாந்தகடமைகளைத் தேவசமூகத்திலே—தமது திருககுமாரனின் சந்நிதியிலே அதிகம்பிரமாணிக்கபற்றுதலாய்ச் செய்துவந்தார். அவ்வாறுசெய்வதாலே பரிசுத்ததனத்தின் உச்சநிலையை அடையலாமென்று தமதுமுன்மாதிரிகையால் அவர் உலகுக்குக்காண்பித்திருக்கின்ருர்.

திருக்குடும்பத்தைக் காப்பாற்றும் பெரும்பொறுப்பை--பெரும் பணியை மேற்கொண்ட அர்ச். சூசையப்பரும் தமதுதொழிலாகிய எளியதச்சுத்தொழிலை இழிவெனக்கருதாது அல்லும்பகலும் அயராது அதிகம்பிரமாணிக்கமாகச் செய்துவந்தார். அதனல் அவருடையவாழ்க்கை உலகில் கஷ்டப்பட்டுழைக்கும் தொழிலாளருக்கெல்லாம் ஒருபுத்துணர்ச்சியையும், புதியஉற்சகாகத்தையும் பிறப்பிப்பதாயிருக்கிறது. இதிலிருந்து தொழிலாளியான அர்ச். சூசையப்பர் திருநாள் தொழிலாளரினதும், தொழிலினதும் மகத்துவத்தைப் பகிரங்கமாக எடுத்துக்காட்டுவதாய் இருக்கின்றது.

மனுச்சந்ததியார் அனைவரும் நெற்றிவியர்வை நிலத்தில்சிந்த உழைத்துச் சீவனஞ்செய்ய வேண்டுமென்பது தேவநியதியாகும். அதனல்நாம்செய்யும் தொழில் எத்துணைபெரும்எளியதாய்—சாமானியமானதாய்இருந்தபோதிலும் திருக்குடும்பத்தைக் கண்டுபாவித்துநாமும் தேவசித்தத்துக்குப் பணிந்தமனதுடன் பிரமாணிக்கமாகச் செய்துவருவோமானல் பெரும்பலன்எய்துவோம். நாம் 'செபத்திலும், வேலையிலும் செலவிடும்நேரங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் செபத்திலே செலவிடும்நேரம் அதிகம்சொற்பமேயெனக் கண்டு கொள்வோம். அதனல் நாம் செய்யும்வேலையும் செபமாக மாறி நமது "இரட்சணியத்துக்குத் துணைச்செய்யவேண்டும்; வேலையே செபமாயிருக்கிறது" என்ருர்பெரியஅர்ச்சியசிட்டவரான ஆசீர்வாதப்பர். பிரயாசப்பட்டுச் சுமுத்திரையாகச் செய்யும்வேலையைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்குமிடத்து அதுவும்செபமாகின்றது. எவராயினும்சரி,எவ்விதஅந்தஸ்தினராயினும்சரி அவரவர் தத்தம்அந்தஸ்தின்கடமைகளைச் சுமுத்திரையாகச் செய்வதற்குப்பின்பற்றப்பட வேண்டியது, நசரேத்தூரின் திருக்குடும்பமே என்பதை மேதினவிழா நமக்கு எடுத்துக்காட்டுகிறதுஎன்க.

---

## திரும்பவும் பொதுத்தேர்தல்

கவர்னர்-ஜெனறலின் சிம்மாசனப்பிரசங்கத்திற்கு அரசாங்கம்கொண்டுவந்த நன்றிதெரிவிக்கும் பிரேரணைசம்பந்தமாய்ச் சனப்பிரதிநிதிகள் சபையில் மூன்றுதினங்களாக விவாதம் நடைபெற்று ஈற்றில் அப்பிரேரணை அரசாங்ககட்சிக்குத் தோல்வியாய்முடிந்தது. அரசாங்கத்திற்கு 61வாக்குகளும், எதிர்க்கட்சிக்கு 86வாக்குகளும்கிடைத்தன. இதிலேஅரசாங்கம் தோல்விகண்டதால் பிரதமரின் சிபாரிசைக் கவர்னர்-ஜெனறல்ஏற்றுச் சென்றசனிக்கிழமை பாராளுமன்றத்தைக் கலைத்துவிடலாயினர். அவரும் எதிர்க்கட்சித்தலைவர்களுடன் கலந்தாலோசித்துவிட்டுத்தான் அவ்வாறு செய்தனர். இதனைத்தொடர்ந்து அடுத்தபொதுத்தேர்தல்நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. அதன்படி இந்தப்பொதுத்தேர்தல் வருகிற ஆடிமாதம்20-ந்திகதி புதன்கிழமை நடந்தேறும். அதில்போட்டியிடும் அபேட்சகர்கள் தங்கள்நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கவேண்டிய தினம் வைகாசிமாதம்20-ந்திகதி வெள்ளிக்கிழமையாகும். தேர்தல்முடிந்து புதியபாராளுமன்றம் ஆவணிமாதம்5-ந்திகதியன்று கூடும். அதுவரை திரு. டட்லி சேனநாயகா காபந்துஅரசாங்க பிரதமராயிருந்துவருவார்.

ஒரேவருடத்தில்இருமுறை—அதிலும் முந்தியதேர்தல்நிகழ்ந்து சரியாய்நான்குமாதகாலத்தில் மற்றோர்பொதுத்தேர்தல் நடைபெறவேண்டிய துரதிர்ஷ்டநிலை எமதுநாட்டில் ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கதே. ஆயினும் இன்றையஅரசியல் சூழ்நிலையில் இந்தமுடிவு தவிர்க்கமுடியாததே. அரசாங்கத்தைப் பொறுப்பேற்று நடாத்தக்கூடிய பெரும்பான்மைப்பலம் எந்தஒரு அரசியற்கட்சிக்கும் கிடையாதென்பது சென்றபொதுத்தேர்தலுக்குமுன் தெளிவானதே. அதனல்பொதுத்தேர்தல் மீண்டும்நடைபெறுகவேண்டுமென்பது எதிர்பார்க்கப்பட்டதே. ஆகவே, திரும்பவும் பொதுத்தேர்தல் நடைபெறப்போவதையிட்டு எவருமே ஆச்சரியப்பட இடமில்லை. ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்திற்கு ஆறுமாதமோ அன்றேல் ஒருவருடமோ அவகாசம்கொடுங்கள்; தேர்தல்நடத்துவதற்குச் சூழ்நிலை நன்ருயில்லையென்று சிலர்சொல்லிப்பார்த்தனர். ஆனல், அரசாங்கத்தைக் கவிழ்க்கமுனைந்துநின்ற எதிர்க்கட்சிகள் அன்னுரின்சொல்லுக்குச்செவிசாய்க்கவில்லை.

ஆனல், ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி மற்றும்நான்குகட்சிகளின் ஆதரவுடன் மாற்றுஅரசாங்கம்ஒன்றைத் தன்னல் அமைக்கமுடியுமென்று தெரிவித்திருக்க, இந்த நிலைமையிலே அதற்குச்சந்தர்ப்பங்கொடாது பாராளுமன்றத்தைக்கலைத்தது தகாதசெயலென்று ஆட்சேபம் தெரிவிக்கப்படுகிறது. இருமாக்ஸியவாதகட்சிகளின் ஆதரவைப்பெறும் ஜனநாயககட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி அரசாங்கம்நடத்த முன்வருமிடத்து, அக்கட்சியின் முன்னுள் தலைவரான திரு. பண்டாரநாயகாவின் அரசாங்கம் அப்போது பட்டபாடாகவே கருமம்முடியுமன்றே! கடந்த நான்குஆண்டுகளாக நாட்டின் தேசீயவாழ்க்கை நாலாவகையிலும் சீர்குலைந்து வந்திருக்கையில் மீண்டும்ஸ்திரமற்ற ஓர் அரசாங்கத்தை ஆட்சிப்பீடத்தில் அமரச்செய்வது மதிகேடான செயலாகவேமுடியும். பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. ஒருஸ்திரமான அரசாங்கத்தைத் தெரிவுசெய்ய மக்களுக்கு மற்றோர்சந்தர்ப்பம் அருளப்பட்டிருக்கிறது. அவர்கள் இதனைப் பயன்படுத்தினல் ஸ்திரமானஅரசாங்கம்தான். அன்றேல் நாட்டின் சுபீட்சம் பங்கமடையவேண்டியதே.

---

வட இலங்கை
கத்தோலிக்க தொழிலாளர் சங்கம்



## கத்தோலிக்க தொழிலாளர் சமாகமம்

## வைகாசி 1-ந்திகதி

தொழிலாளரின் பாதுகாவலரான
**அர்ச். சூசையப்பரின்**
திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்

### சுற்றுப்பிரகாரப் பாதை:

திருச்சுரூபம். பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவிலிலிருந்து புறப்பட்டு,

கடற்கரை வீதி
மூன்ரும் குறுக்குத்தெரு (பாஷையூர்)
ஈச்சமோட்டை ஒழுங்கை
ஈச்சமோட்டை வீதி
ஓல்ட்பாக் வீதி
குருசோ வீதி
அச்சக வீதி
பெரியதெரு
ரெம்பிள் வீதி
ஆஸ்பத்திரி வீதி
மூன்ரும் குறுக்குத்தெரு
நாலாம் குறுக்குத்தெரு
கடற்கரை வீதிவழியாகக் கடலணைமைதானம் வந்து சேரும்.

குறிப்பு: பாதைஓரங்கள்மாத்திரம் சோடிக்கப்பட வேண்டும்.

### நிகழ்ச்சி நிரல்

காலை 7-00 மணி: திவ்வியபூசை (ஆசனக்கோவில்)
9-00 மணி: சம்பாஷணைகள்
10-30 மணி: திருமணித்தியாலம்
11-30 மணி: செபமாலை
மாலை 2-00 மணி: சம்பாஷணைகள்
4-30 மணி: சுற்றுப்பிரகார ஆரம்பம்
7-00 மணி: திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம்

எஸ். ஏ. சந்தியாகோ,
காரியதரிசி.

---

### லஞ்சவிசாரணைக் கம்மிஷன்

பண்டாரநாயகாவின் மந்திரிசபையிலே போக்குவரத்து மந்திரியாயிருந்த திரு. ஹென்றிஅபயவிக்கிரமா, தபால் மந்திரியாயிருந்த திரு. சி. ஏ. எஸ். மரிக்கார் எனுமிருவர்மீதும் சுமத்தப்பட்டுள்ள ஐந்து லஞ்சக்குற்றச்சாட்டுகள்பற்றியும் லஞ்சவிசாரணைக்கம்மிஷன் பகிரங்கவிசாரணை நடத்திவருகிறது. அடுத்தபடியாகப் பண்டாரநாயகா மந்திரிசபையில் சுகாதார மந்திரியாயிருந்த திரு. ஏ. பி. ஜயசூரியா, அதேமந்திரிசபையில் தொழில் மந்திரியாயிருந்தவரும், இதுவரை பாராளுமன்றத்தில் ரத்கமைப்பிரதிநிதியாய் இருந்தவருமான திரு. எம். டி. சொய்சா, தஹநாயகா மந்திரிசபையில் போக்குவரத்து மந்திரியாயிருந்த திரு. ஆர். ஈ. ஜயதிலகா, டி. எஸ். சேனநாயகாவின் மந்திரிசபையில் உதவிமந்திரியாயிருந்த திரு. எச். டி. இஸட் சிறிவர்த்தனஎன்பவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள லஞ்சக்குற்றச்சாட்டுகள் பற்றியவிசாரணைகள் அடுத்தவைகாசி 16-ந்திகதிமுதல் நடைபெறவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை நட்பு

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

புக்கும், பேச்சுக்கும் ஆளாகவேண்டியிருந்தபோதிலும் தேவதாசன் தன் வாழ்நாட்களின் பெரும்பகுதியை அலெக்சான்டருடன் சேர்ந்துதான் திருத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் செயலாற்ற முற்பட்டான். இவைகளுக்கிடையில் தன் கடமைகளையும் நிறைவேற்றத் தவறுவதில்லை தேவதாசன் பெரும்பாலும் அலெக்சான்டர் செல்லுமிடங்களுக்கெல்லாம் சென்றான். அதிகமாக அவனுடனேயே பெரும்பான்மையான் நேரத்தைக் கழித்தான். தகாதவழிகளில் நடக்கத் தலைப்படும்பொழுது தடுப்பான். இவைகள் அலெக்சான்டருக்கோ, அன்றேல் அவனுடைய நண்பர்களுக்கோ பிடிப்பதில்லை. ஒன்றில் அவன் தங்களுடன் சேர்ந்து தாங்கள் செய்வதைச் செய்யவேண்டும். அல்லது தங்களுக்கு முட்டுக்கட்டையாக இல்லாமல் விலத்தவேண்டும் என்று தீர்மானித்தார்கள். முயற்சியெல்லாம்வியர்த்தமாகவேபோயின. காரணம் என்னவெனில் தேவதாசன் தன் நண்பனில் வைத்த அடங்காத அன்பேயாகும். அலெக்சான்டரின் நண்பர்கள் தேவதாசனைப் பிரிப்பதாயிருந்தால் அடித்துத் துன்புறுத்தியோ, அன்றேல் வெருட்டியோதான்பிரிக்கலாம் என்ற நிலைக்கு வந்தபோது அலெக்சான்டர் அவர்களைத்தடுத்தான். ஏனெனில், சிறுவயதில் இருந்தே அலெக்சான்டரும் தேவதாசனும் ஒன்றாகப் பழகியவர்கள். அலெக்சான்டர் கெட்ட சகவாசத்தின் நிமித்தம் கெட்டுப்போனாலும் தேவதாசன் அவன்மீது நல்லன்பே வைத்திருந்தான்.

ஆகவே, இந்நிலையைத் தேவதாசன் நன்கு பயன்படுத்திக்கொண்டு அவனைப் பாவசங்கீர்த்தனத்துக் கழைத்தான். அலெக்சான்டருக்கோ விருப்பமில்லையாதலால் எவ்விதமும் அதற்குத் தடைசொல்லி வருவான். இவ்விதம் பலதடவைகள் நடைபெற்றன. தேவதாசன் களைக்கவுமில்லை, தேவதாயை நோக்கிச் செபிக்கத் தவறவுமில்லை.

(தொடரும்)

## பண்ணைக்கடற்பாதை

பாராளுமன்றத்திலே ஊர்காவற்றுறைப்பிரதிநிதியாயிருந்த திரு. வி.ஏ. கந்தையா அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையைத்தொடர்ந்து சிலகாலமாகத் தடைப்பட்டிருந்த பண்ணைக் கடற்பாதைவேலை தற்போதுதுரிதமாக நடைபெற்றுவருகின்றது. ஆழ்கடலை நிரவிப் பாதையை அமைப்பதிலே மழையையும்பாராது தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அதனால் வருகிற ஆனி அல்லதுஆடிமாதத்திலே இந்தக் கடற்பாதைவேலை முடிவடைந்து போக்குவரத்துக்குப் பாதை திறந்து வைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மூன்றுலட்சம் தோன் பர்மா அரிசி

இலங்கையும், பர்மாவும் வர்த்தக உடன்படிக்கைஒன்றுக்குக் கைச்சாத்திட்டிருக்கின்றன. இந்தஉடன்படிக்கைப்படி தேங்காயெண்ணெய், கொப்பறா, தேயிலை, தேங்காய், கயிறு, மற்றும்முக்கியமான சிலபொருட்களை இலங்கை பர்மாவுக்கு ஏற்றுமதிசெய்யும். இவற்றிற்குப்பதில் வருடம்ஒன்றுக்கு மூன்றுலட்சம்தொன் அரிசியை இலங்கைக்குப் பர்மா ஏற்றுமதி செய்யும். இத்துடன் மிளகாய், உருளைக்கிழங்கு, தேக்கமரம் முதலியவைகளையும் பர்மா இங்கு அனுப்பி வைக்கும். நான்குவருடங்களுக்கு இந்தஉடன்படிக்கைசெல்லும்.

## கோண்டாவிலில் 'யாழ்தேவி'

நெடுநாள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின்பயனாக இம்மாதம் 25-ந்திகதியாகிய சென்றதிங்கட்கிழமைமுதல் கோண்டாவில் றெயில் வேஸ்றேஷனில் யாழ்தேவி தங்கிச் செல்லுகின்றது. வடபகுதியிலுள்ள பெரிய றெயில்வேஸ்றேஷன்களில் இதுவும்ஒன்றாகும். கோண்டாவில், கொக்குவில், இனுவில், சுதுமலை, தாவடி, மானிப்பாய், உரும்பிராய் முதலாம் கிராமங்களில்வசிக்கிற மக்களுக்குக் கோண்டாவிலில் யாழ்தேவிதரித்துச் செல்வது பெரும்வசதியாயிருக்கும்.

## நஞ்சுகலந்த கள்ளைக்குடித்து நால்வர்மரணம்

தெல்லிப்பளைக் கிராமச்சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போது அச்சங்கத்தில் ஒருஅங்கத்தவரும், சமாதானநீதவானுமாகிய திரு. தில்லையம்பலம் மாணிக்கவாசகரும், அதேகிராமச்சங்கத்தில் மற்றோர் அங்கத்தவரான திரு. வேலுப்பிள்ளை முருகேசுவும், மருதன் கதிரவேலுவும், வட்டன்காசியனுமாகியநால்வரும் சென்றவாரம் செவ்வாய்க்கிழமை நஞ்சுகலந்தகள்ளை அருந்தியபின் மரணமானார்கள். முந்தியமூவரும் அன்றுமாலை அங்குள்ள ஒருகள்ளுக்கொட்டிலுக்குச் செல்லவே, அக்கொட்டிலில்இருந்த வட்டன் காசியன் அம்மூவருக்கும் கள்ளைக்கொடுத்துவிட்டுத் தானும் குடித்தான். பின்னர் சிலவினாடிகளால் தலைசுற்றுவதாயும், வாந்திவருவதாயும் நால்வரும்கூறினர். சிலமணிநேரத்தின்பின் கதிரவேலு, காசியன் எனுமிருவரும் அங்குதானே மரணமடைந்தனர். ஏனைய இருவரும் காங்கேசன்துறைஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிலமணிநேரத்தின்பின் இறந்துபோயினர். இவர்கள் மரணமடைந்தது சம்பந்தமாகச் சந்தேகத்தின்பேரில் அப்பாக்குட்டி மயில்வாகனம், வி. சின்னத்துரை எனுமிருவரும் கைதுசெய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## கிராமச்சங்கத்தலைவர் கொலைவழக்கு

வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கத் தலைவராயிருந்த திரு. பி. எம். நடராசா கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கொழும்பு, அரசாங்க கட்டடவேலைப் பகுதி எஞ்ஜினியர் திரு. செல்லப்பா, சண்முகநாதன், செல்லப்பா சபாரத்தினம் எனுமிருவரும் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். அவரைக்கொலைசெய்ததாக வட்டுக்கோட்டையைச்சேர்ந்த சின்னத்தம்பி இரத்தினசபாபதிமீது குற்றஞ்சாட்டிப் பொலிஸர் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர். விசாரணை அடுத்தவைகாசிமாதம் 13-ந்திகதிக்குத் தவணையிடப்பட்டிருக்கிறது.

## மெசஞ்சர்பத்திரிகையின் ஆசிரியர்

"கதலிக் மெசஞ்சர்" பத்திரிகையின் ஆசிரியரான வண. மனிக் முத்துக்குமாரு சுவாமியவர்கள் நான்குமாத விடுமுறையிலே சென்றபாஸ்குத்திருநாள்ஞாயிறன்று கப்பல்மார்க்கமாக ஐரோப்பாவிற்குச் சென்றிருக்கிறார். அங்கே இவர் நேப்பிள்ஸ்நகரில் விசுவாசப்பரப்புதல்சபையின் தேசியதலைவர் நடத்தும் மகாநாட்டிலும், பின்தரோமாபுரியில் அவர்கள் தொடர்ந்துநடத்தும் மகாநாட்டிலும் கலந்துகொள்வார். அதன்மேல் ஜேர்மனி, அயர்லாந்து முதலாம் நாடுகளையும், பரீஸ், லண்டன் ஆதியாம் நகர்களையும் தரிசித்துக்கொண்டு திரும்புவார். அவர்திரும்பவும் வந்துசேருகிறவரை "கதலிக் மெசஞ்சர்" பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான வண. ஜஸ்ரின் பெறேரா சுவாமியவர்கள் அதன் தற்காலிக ஆசிரியராய் இருந்துவருவார்.

## 19நாள் சாட்சியமளித்தகவிஞர்

பண்டாரநாயகா கொலைவழக்கு விசாரணையிலே ஒருசிங்களக்கவிஞரும், எழுத்தாளருமான திரு.பியதாசா மல்லகொட என்பவர் 19தினங்களாகச் சாட்சியம்அளித்திருக்கின்றார். இவருடையசாட்சியம் சென்றவெள்ளிக்கிழமையுடன் முடிவானது. இந்த19 தினங்களிலும் 17 தினங்கள் இவர் குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். ஆறும்எதிரியான திருமதிவிமலா விஜயவர்த்தனவின் வழக்கறிஞர் திரு பார் குமாரகுலசிங்கம் இவரைப் 15 தினங்கள் குறுக்குவிசாரணைசெய்தார். நீதிஸ்தலசரித்திரத்தில் இதுபுதிய ஒரு சாதனையாகும்.

## ஆசிரியத்தொழிலுக்குப் 12,505பேர்

எஸ். எஸ். சி. பரீட்சையில் சித்தியடைந்தவர்களாய் ஆசிரியத்தொழில் வேண்டிப் 12,505பேர் மேல்மாகாண கல்விக்காரியாலயத்தில் தங்கள்பெயர்களைப் பதிவுசெய்திருக்கின்றனர். இவர்களுக்கு வேலைவசதியளிக்க நிதிவசதியில்லையென்றும், நிதிவசதிகிடைத்ததும் இவர்களுக்கு ஆசிரியத்தொழில் வழங்குவதுபற்றி ஆலோசிக்கப்படுமென்றும் கல்விமந்திரி சனப்பிரதிநிதிகள்சபையில் தெரிவித்திருக்கின்றார். மேல்மாகாணத்தைத்தவிர, ஏனையமாகாணங்களிலும் எஸ். எஸ். சி. படித்த ஆயிரக்கணக்காணமாணவர்கள் ஆசிரியத்தொழில்பெறக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

## மின்சாரத்தால் தாக்குண்ட சிறுவன்

கைதடியைச்சேர்ந்த சின்னராசா தம்பிராசாஎன்ற 12வயதுச்சிறுவன் மற்றும் இருசிறுவர்களுடன் சென்ற வெள்ளிக்கிழமை அங்குகொடியேற்றி விளையாடிக்கொண்டிருந்தான். அப்போது அவன்ஏற்றியகொடி வீதியோரத்திலுள்ள மின்சாரக்கம்பியில் சிக்கிக்கொள்ளவே அதைஎடுக்க அவன் பிரயத்தனப்பட்டான். அதைக் கவனித்த மற்றச்சிறுவர்கள் எச்சரிக்கைசெய்தும் அவன்பறுவாய்பண்ணாது மின்சாரக்கம்பத்தில்ஏறிக் கொடியை எடுக்கமுயன்றபோது மின்சாரத்தால் தாக்குண்டு மரணமானான்.

## கத்தோலிக்கரான நீதியரசர்கள்

இங்கிலாந்திலே உயர்தரநீதிமன்றத்தின் நீதியரசராக மற்றுமோர்கத்தோலிக்கர் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். திரு. சாள்ஸ் றிற்சி றசெல், கியூ. சி. அவர்களே இந்தப்புதிய நீதியரசராவர். இவர் கில்வெனின் காலஞ்சென்ற லோட்றசெல் பிரபுவின் புதல்வர். புறொட்டஸ்தாந்தசமயம் ஏற்பட்டபின் இங்கிலாந்தின் பிரதம லோட்நீதியரசராக நியமனஞ் செய்யப்பெற்ற முதலாவது கத்தோலிக்கரான லோட்றசெல்பிரபுவின் பௌத்திரர். தற்போதுஇவருடன் இங்கிலாந்திலே உயர்தரநீதிமன்ற நீதியரசர்களாக நான்கு கத்தோலிக்கர் இருக்கின்றனர். அங்கே புறொட்டஸ்தாந்தசமயம் ஏற்பட்டபின் கத்தோலிக்க நீதியரசர்களின் கூடியதொகை இதுவாகும். நீதியரசர் எல்வெஸ், நீதியரசர் வலிங்ரன், (இவர் மனந்திரும்பிய ஒருவர்) நீதியரசர் பரிஎன்பவர்களே ஏனையமூவருமாவர்.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

## ஆபேலின் பலியும்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபேல் அவனைச்சாந்திசெய்யலாமெனநம்பி அவனுடன் சந்தோஷத்துடன்சென்றான். அவர்கள் வீட்டிலிருந்து அதிகம்தூரத்தில் சென்றதும் காயீன் தான் கொண்டுசென்ற ஒருகோலை உயர்த்தித் தனது இளையசகோதரனைக்கொல்லும் ஒருதண்டாயுதமாக அதனைப் பயன்படுத்தினான். சர்வேசுரன் அவர்களுக்கு அதிகம்சமீபத்தில் நின்றார். அதனால் காயீனைநோக்கி: "உனதுசகோதரன் ஆபேல் எங்கே?" என்று கேட்டார். அதற்குக்காயீன் "எனக்குத்தெரியாது; எனதுசகோதரனுக்குக் காவலன் நான்தானா?" என்று கோபத்துடன் பதிலளித்தான்.

காயீனின் துட்டத்தனத்துக்காகச் சர்வேசுரன் அவனைத் தண்டித்தார். வருங்காலத்தில் நீ நடும் பயிர்கள்ஒன்றுமே வளரமாட்டாதென்று அவனுக்குச் சொன்னார். அவன் தனது பெற்றோர் வசித்திருந்தநாட்டிலிருந்து துரத்தப்பட்டான். அன்றுமுதல்அவன் ஒருநாடோடியாய் அலைந்துதிரிந்தான்.

சர்வேசுரன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் செத்என்றமற்றோர் உத்தமபக்தியுள்ள புத்திரனை அருளினார். இவன் தனதுபெற்றோரின் நன்மதியைக்கேட்டுநடந்து சர்வேசுரனுக்குஉகந்த பலிகளைச் செலுத்தினான். ஆதாமும், ஏவாளும் தங்கள்சீவியகாலத்தின் எஞ்சியபகுதியைச் சர்வேசுரனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதற்கும், தங்கள்பிள்ளைகளைத் தேவபயத்திலும், தேவநேசத்திலும் வளர்ப்பதற்கும் பிரயாசப்படுவதில் செலவிட்டார்கள்.

ஆபேல் கிறீஸ்துநாதரின் ஓர் அறிகுறியாய் இருந்தான். ஓர் ஆயன் — அதாவது ஒருஇடையனென்றமட்டிலே தேவனுக்கு உகப்பான பலிகளை ஒப்புக்கொடுத்துவந்து, அழுக்காறுகொண்ட தனதுசகோதரனால் கொலையுண்டான். நல்லாயரான கிறீஸ்துநாதர் மனிதஇரட்சணியத்திற்காகத் தமதுஆருயிரைச் சர்வேசுரனுக்குஒப்புக்கொடுத்து யூதர்கள்கொண்ட அழுக்காறு காரணமாகமரணத்துக்குள்ளாக்கப்பட்டார். யூதாசைப்போல் காயீனும் தான் பாவம்கட்டிக்கொண்டபின் தனக்குமன்னிப்புக் கிடைக்குமாவென்று அவநம்பிக்கைகொண்டான். ஆனால்,சர்வேசுரன் இரக்கங்கொண்டு அவன் பச்சாத்தாபப்பட்டு மனந்திரும்பும்படியாய் அநேகாவருடங்கள் கொடுத்தார். ஆனால்,அவன் இந்தவரப்பிரசாதத்தைப் பயன்படுத்தினனா, இல்லையாஎன்பதை நாம்அறியோம்.

● மெக்சிக்கோநாட்டிலே 1,900 கத்தோலிக்க பாடசாலைகள் இருக்கின்றன. ஆனால், இவைகளெல்லாம் சட்டவிரோதமானவைகள். ஆயினும், இவைகள் தற்போது சுமார்மூன்றுலட்சம் பிள்ளைகளுக்குக் கல்விபயிற்றிவருகின்றன. அந்நாட்டிலே பாடசாலைகள் அதிகம் குறைவாயிருப்பதால் கத்தோலிக்கபாடசாலைகள் சட்டவிரோதமானவையென்று அரசாங்கம் நிறைவேற்றிய சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே !**

ஓர் அரசன் தன்நாட்டின் பிரசைகளைக் கொடுமையாக ஆட்சிநடத்தி வந்தான். பிரசைகள் என்செய்வதென்று அறியாது ஏங்கித்திகைத்தனர். பிரசைகளில் மதியூகம்நிறைந்த தலைவனொருவன் பிரசைகளை ஒன்றுபடுத்தி அரசனைக் கொன்றுவிடத் தருணம்பார்த்திருந்தான். இச்செய்தியை அறிந்திருந்த அரசனின் உற்றநண்பன் இரகசியமாய் அரசனுக்குக் கடிதம்அனுப்பினான். அரசன் அக்கடிதத்தைப் பிறகுபார்க்கலாம் என்று மேசையில் வைத்துவிட்டான். சடுதியில் பிரசைகள் ஒன்றுசேர்ந்து அரசனைக்கொன்றுவிட்டார்கள். நாடும் பிரசைகளும் அமைதியாய் வாழ்ந்துவந்தனர். அன்புமிக்க இளைஞர்களே! நீங்கள் இக்கதையில் கற்றுக்கொண்ட பாடங்கள் எவை ?

1-வது அரசன் தனது ஆங்காரத்தினால் அரசுரிமைகளை இழந்து மாண்டான். 2-வது பிரசைகள் ஒற்றுமைஎன்னும் அருங்குணத்தால் நாட்டையும், தங்களையும் காப்பாற்றிக்கொண்டார்கள். 3-வது காலத்தையும், நேரத்தையும் தவறவிட்டதினால் அரசன் புத்தியை இழந்தான்.

அன்புமிக்க இளைஞர்களே! ஆங்காரத்தை அடக்கி வாழ்பவன் ஞானி சாவைநினைத்து வாழ்பவன் விவேகி. ஒற்றுமையாக வாழ்பவன் புத்திமான். காலத்தைத் தவறவிடாதுவாழ்பவன் அறிவாளி.

ஞானப்பிதா

—(⌣)—

# கன்னியின் கடிதம்

**எனதன்பின் சோதரி!**

ஆறுமாதகாலமாக நோயின்பிடியிலே சிக்கியிருந்த உங்களின் கணவன் கடந்தமாத இறுதியில் இவ்வுலகில் நின்றும் பிரிந்துவிட்டார் என்னும் துயரசெய்திகேட்டு மிகவும்வருந்தினேன். இனி ஆறுகுழந்தைகளுடன் உங்கள் நிலைமையை எண்ணிப்பார்க்கக் கண்கலங்குகிறது. உங்களது இந்தத் தாங்கொணாத்துன்பம்விரைவில் மறக்கமுடியாது. இம் மாதுயரால் மனச்சோர்வும், வாழ்க்கையில் வெறுப்பும் உண்டாவது இயற்கைதான்.

ஆனால், உங்களுக்குஏற்பட்ட இத்துயரம் தற்செயலான — காத்திராப் பிரகாரமான நிகழ்ச்சியல்ல. காலாகாலமாக உங்களைக் காத்துவரும் சர்வவல்லப தேவனிடமிருந்தே— அவரைஅறிந்தே வந்துள்ளது. தாம் அதிகமாக நேசிப்பவர்களையும், தம்மை அதிகம்நேசிப்பவர்களையும் அவர் சிலுவையினாலேயே புடமிடுகிறார் என்பதை நினைவூட்டுகிறேன்.

மேலும், உங்களது இத்துன்பம் மனிதரை இரட்சிக்க மனுவுருவெடுத்த தேவன் அடைந்த— அனுபவித்த கொடிய ஆகுலங்களிலும் பெரிதல்ல. இவ்வுலகத்திலே அநித்திய துன்பங்களினால் எம்மைவருத்தும் தேவன் அதற்குரிய — அதனிலும் மேலான நித்தியஇன்பத்தை அளிக்கக் காத்திருக்கிறார். நாம் துன்பங்களை மேற்கொண்டு, வெற்றிபெறுவோமாகில் நித்திய இன்பத்தை அடைய அருகதையுடையவராவோம்.

மேலும், தந்தையில்லாத ஆறு குழந்தைகளையும் எப்படிப் பராமரிக்கமுடியும்? கடவுளுக்குக் கண்ணில்லை. அவர் நீதியற்றவர். நீதியுடையவராயிருந்தால் என்னை இப்படி ஆறுகுழந்தைகளுடன் தவிக்கவிடுவாரா? என நீங்கள் அழுது புலம்பியதைக்கேட்டு மிகவும்வருந்துகிறேன். சகிக்கமுடியாத துயரம் தான் உங்களை இப்படிக் கூறவைத்தது. எனினும், உங்களது இக்கூற்று மிகத்தவறானதாகும். ஆகாயத்திற் பறவைகளுக்கு உணவும், பள்ளத்தாக்குகளில் மலரும் லீலிப்புஷ்பத்திற்கு அழகும்கொடுத்துப் போஷிக்கும்தேவன் தமது சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரைக் கைவிட்டுவிடுவாரா? இன்னும் மோட்ச முடிக்குப் பேறுபெற்றவர்களென நம்மால்வணங்கப் படும் பரிசுத்தர்கள் அனைவரது வாழ்க்கையையும் புரட்டிப்பார்த்தால் அவர்களது வாழ்க்கை சிலுவையாலேயே புடமிடப்பட்டது என்பதைக் காணலாம்.

ஒன்றன்பின் ஒன்றாக இன்பங்கள் வரும்போது அதனைமகிழ்வுடன் வரவேற்கும்நாம் துன்பங்கள் ஏற்படும்போது வெறுப்பது நன்றல்ல. இன்னும் "நிலத்திலே விதைக்கப்பட்ட கோதுமை மணியானது அதிகபலன் கொடுக்க வேண்டுமாயின் அது மண்ணிலேதானே மடிய வேண்டும்" என்று திருவுளம்பற்றிய நமது திவ்விய இரட்சகரின் கூற்று; சிலுவையின் அவசியத்தை நமக்குத்தெளிவுறுத்துகின்றது.

மேலும், துன்பத்தை உங்களுக்கு அளித்ததேவன் உங்களைத் தனிமையாய்த் தாங்கிக்கொள்ளென விட்டுவிடவில்லையே? மகிழ்ச்சிமிக்க மோட்சவீட்டைவிட்டுத் திவ்வியநற்கருணையில் எழுந்தருளி இரவுபகல் காத்திருந்து, "வருந்திச் சுமைசுமக்கிறவர்களே நம்அண்டை வாருங்கள். நாம் உங்களைத் தேற்றுவோம்" என அன்புடன் அழைக்கின்றார். உங்களது இத்துயரிலே ஆறுதல்அளிக்க அவரன்றி வேறுயாரால் முடியும்? எனவே, அவரது நேசஇருதயத்தை அண்டிச்சென்று ஆறுதல்அடையுங்கள். அதைவிடுத்து அழுதுமாய்வதால் பலன்யாதோ?

இன்னும் தேவன் உங்களுக்கு அளித்திருக்கும் ஆறுகுழந்தைகள் என்னும் மகத்தானபொறுப்பை மறக்கவேண்டாம். அவர்களை நற்கனிகொடுக்கும் மரங்களாக்குவது உங்கள்கடமை. எனவே, கவலையினால் வீணேமாயாது, ஆறுதலற்றிருக்கும் ஆறுகுழந்தைகளுக்கு ஆறுதலாயிருந்து அவர்களைத் தேற்றவும்.

உங்களது இக்கவலையும் விரைவில் மறையுமென எண்ணுகிறேன். உங்கள் துன்பம் விரைவில்நீங்கிட எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவாராக.

இங்ஙனம்,
உங்கள் அன்புள்ள,
ச. மேரிபவுஸ்தீனா.

---

ரோசாப்பூவானது தனது நிறத்தையும், வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றது மனிதனோ இளம் பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிறான்.

# உத்தானத்தின் பின்வரும் 2-ம் ஞாயிறுச் சுவிசேஷம்

"இந்த ஆட்டுக்கிடையைச்சேராத வேறே ஆடுகளும் எனக்குஉண்டு"
அரு. 10, 11—16)

யேசுநாதர் இவ்வுலகில் சீவித்தபோது பலஅரியபோதனைகளை உவமைகள்மூலம் போதித்தார். நானே நல்லஆயன்என்றும். நல்லஆயன் தன் ஆடுகளுக்காகத் தன்பிராணனைக் கொடுக்கிறான்என்றும், நானே நல்லமேய்ப்பன்; நான் என் ஆடுகளை அறிவேன். என் ஆடுகளும் என்னை அறியும். என் உயிரையும் என் ஆடுகளுக்காகக் கொடுக்கிறேன். இந்த ஆட்டுக்கிடையைச் சேராத வேறேஆடுகளும் எனக்குஉண்டு. அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும். அவைகளும் என்குரல் சத்தத்தைக் கேட்கும். அப்பொழுது ஒரேமந்தையும், ஒரேமேய்ப்பனும் ஆகும்.

யேசுக்கிறீஸ்துநாதர் தாம்பாடுபட்ட பாடுகளின் பேறுபலன்களை உலகத்தின் எத்திசையும்உள்ள மானிடர்யாவரும் பூரணமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் யாவரும் நித்தியசீவியம்அடைய வேண்டும் என்றும்விரும்புகிறார். மேலும்தம்மந்தையில்சேர்ந்துள்ள ஆடுகளுக்கு இரட்சணியம் உண்டென்றும், தம்மந்தையைச் சேராத வேறேஆடுகள் தமக்கு உண்டுஎன்றும் கூறுகிறார். இந்த வேறேஆடுகள் யார்? யேசுநாதர்சுவாமியினால் உண்டாக்கப்பட்ட பரிசுத்ததிருச்சபையில் சேராமலும், அதன் போதனையின்படி நடவாமலும்இருக்கும் மக்களையே தமது ஆட்டுக்கிடையைச்சேராத வேறேஆடுகள் எனக்குறிக்கிறார். இவர்கள் நித்தியசீவியம் அடையவேண்டுமல்லவா? இதனால் இவர்களுக்கு உண்மையான வழியைக் காட்டுவது உங்கள்கடமையல்லவா? இதனால்நீங்கள் உத்தமகத்தோலிக்க சீவியம் சீவித்தால்தான் மற்றவர்களுக்கு உத்தம கத்தோலிக்க சீவியத்தைப் படிப்பிக்கலாம். உங்களுடைய முன்மாதிரிகையினால் அவர்கள் ஞானவெளிச்சத்தைப் பெறுவார்கள்.

உயிர்த்தெழுந்த ஆண்டவரும், இரட்சகருமாகிய யேசுக்கிறீஸ்துநாதரிடம் உண்மையான ஆட்டுக்கிடையைச்சேராத வேறேஆடுகளுக்காகவும் மன்றாடுங்கள். அவர் அவர்களுக்கு ஞானவெளிச்சத்தைக் கொடுப்பார்.

—(⌣)—

## மறந்து விடாதீர்கள்

தபசுகாலம் வந்து கத்தோலிக்க பெருமக்களாகிய நம்முடன் நாற்பது நாட்கள்கூடியுலாவி நடமாடிவிட்டுப் போய்விட்டது. இல்லை, இப்பொழுதுதான் போய்க்கொண்டிருக்கிறது. இந்தத் தபசுகாலநாட்களில் நாம் அடிக்கடி, சிலர்நாற்பதுமுறை, சிலர் அதிலும்குறைவாகவும். மற்றும்சிலர் நாற்பதுவிசைக்குக் கூடவும் ... ...

"மனுமக்கள் அடக்கஒடுக்கமின்றி வஸ்திர ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு பெருமைசலாக்கியம் பாராட்டியதற்கு உத்தரிக்கும்பொருட்டுத் தேவரீர்தாமே நிர்வஸ்திரராய்ச் சங்கோசத்துடன் நிற்பதைக்கண்டு துக்கித்துப் பிரலாபிக்கிறேன். மேலும் வெட்கமும், நாணமுமின்றி லாகிரிவஸ்துகளைப் பிரயோகித்துக் குடும்பங்களைத் தரித்திரத்திற்குள்ளாக்கிச் சகலருக்கும் துர்மாதிரிகை வருவிக்கும் குடிகாரருடைய பாவத்தின் நிமித்தம் புளித்தகாடியை உட்கொள்ளச் சித்தம்கொண்ட என் நல்லயேசுவே! இனிமேல் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வதில்லை என உமது திருப்பாதத்தில்விழுந்து பிரதிக்கினை செய்கிறேன்" (பெரிய சிலு. பாதை 10-ம்ஸ்த.) என்னும் வார்த்தைகளைத் தியானித்து உச்சரித்திருக்கிறோம். இதில் இருபிரதிக்கினைகள் அடங்கியிருக்கின்றன.

முதலாவது: இனிமேல் அலங்கோலமாய், அவமரியாதையாய் ஆடைகளணிந்து, சரீரத்தைமினுக்கி அலங்கரிப்பதில்லையென்பது

இரண்டாவது: மதிமயங்கக்குடித்துக் குற்றங்களுக்குள்ளாகி அத்தால் பிறருக்குத் துன்மாதிரிகை வருவிப்பதில்லையென்பது.

எனவே, சென்ற நாற்பதுநாட்களிலும் தியானித்தவற்றையும், பிரசங்கமூலமாகக் கேட்டவற்றையும் மறந்துவிடாமல் நாம்செய்துகொண்ட பிரதிக்கினைகளின்படி நடக்க வேண்டும். இவ்விருபிரதிக்கினைகளையும் அனுசரிப்பதற்கு நல்லமனது தான் வேண்டிக்கிடக்கிறது. அவமரியாதையாய் அலங்கரிக்கும்படி நம்மைஎவரும் பலவந்தம்செய்வதில்லை. குடிக்கும்படி நம்மைஎவரும் வற்புறுத்துவதில்லை. இவ்விருகுற்றங்களிலும் அகப்படுபவர்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள்.

## தேவநற்கருணை
அல்லது
## 'நிகரற்ற சஞ்சீவி'

ஞானச்சீவியத்திற்குப் புதுஊக்கமளிப்பது திவ்வியநற்கருணை; உலகமாய்கை,சரீர இச்சைகளுக்கெல்லாம் மருந்து திவ்வியநற்கருணை. வான்வீடு நோக்கிச்செல்லும் பிரயாணத்தில்வரும் களைப்பையும் தவிப்பையும் தீர்க்கும் வற்றாஊறணி. நயவஞ்சகச் சத்துராதிகளை முறியடிக்கும் ஆயுதம். பசாசின் தந்திரசோதனைகளைத்தடுக்கும் கேடயம்; ஆத்தும வரட்சியில் இனிமையும், துன்பதுரிதங்களில்பொறுமையும்,மன அமைதியும்தரும் நிகரற்ற சஞ்சீவி. அலைபோல் திரண்டு, மலைபோல்மோதும் துன்பங்களால் ஞானச்சீவியத்தில் உற்சாகமும், ஊக்கமும்குன்றாமல், அன்றாடம் புதுவலுவைத்தரும் தேவாமிர்தம் தேவநற்கருணையே. இதனைநாம் தீரஅறிந்து திவ்விய நற்கருணையில் எழுந்தருளியுள்ள அன்பின்தேவனை மகா ஆவலோடும், சம்மனசுகளுக்குரிய பக்தியோடும் எம்இருதயப் பெட்டகத்திற்குள் வரவழைத்து அவருடன் ஐக்கியமாகுவோமாக! எம் இருதயமே தேவநற்கருணைப் பேழையென்றெண்ணி, எமக்குள் எழுந்தருளியுள்ள திவ்வியயேசுவை மனங்குவிந்து சிந்தித்து, நாமெல்லாம் அவரை ஆராதிப்போமாக!

— இராசசிங்கம் டோறஸ்

---

"தேவரீர் மரித்தமூன்றாம்நாள் ஒட்டலோகராய்ச் சிரஞ்சீவிகர்த்தராய், அக்ஷயம், சூக்ஷயம், இலகுஎன்னும் தேவஇலட்சணங்களைப்பூண்டு எழுந்ததுபோல், என் பாவங்களையெல்லாம் இந்தக்கல்லறையில் புதைத்துவிட்டு உம்மோடுகூட நானும் இஷ்டப்பிரசாத உயிருடன்எழுந்திருக்க அபேட்சை கொண்டிருக்கிறேன். உமதுவரமின்றி என்னால்ஒன்றும் கூடாததாகையால் எனக்கு உமது வரப்பிரசாதத்தை ஏராளமாகத்தந்தருளும்" (பெ. சிலு பாதை 14-ம் ஸ்தலம்) எனச் சென்றநாற்பதுநாட்களிலும் தியானித்து வந்ததுபோல் தேவஅருளை இரந்து செய்துகொண்ட இருபிரதிக்கினைகளையும் மறந்துவிடாமல் அனுசரித்துவரத் தெண்டிப்போமாக!

செல்வி மேரிரோசனின் சூசைப்பிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அருட்செல்வி

## சமாதானத்தின் இராக்கினி

நாம்வாழும் இந்தஇருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலே நடந்த இரு உலக மகாயுத்தங்களின் விளைவாகக் கோடிக்கணக்கான மக்கள் உயிர்ச்சேதத்துடன் பொருட்சேதமும் அடைந்த துயர சம்பவங்களை நாம் பல வழிகளாலும் அறிந்திருக்கின்ருேம். அக் கொடிய யுத்தங்களின் பலாபலன்களை நாம் இன்றும் அனுபவித்துவருகின்ருேம் இரண்டாவது மகாயுத்தம் முடிந்து சுமார் 14 வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. இன்னும் எங்குபார்க்கினும் "சமாதானம், சமாதானம்" எனும் கூக்குரலே ஒலித்தவண்ணமாய் இருக்கின்றது. காலத்துக்குக்காலம் உலக வல்லரசுகளின் மேதாவிகள் பற்பல இடங்களில் மகாநாடுகள்கூடிச் சமாதானத்தை நிலைநிறுத்த எவ்வளவுதான் பகிரதப் பிரயத்தனம் செய்தபோதிலும் அதற்களவாய்ச் சமாதானம் எங்களைவிட்டு அகன்றகன்று போவதுபோல் தோன்றுகிறதே ஒழியச் சமாதானம் நிலவும் மார்க்கமாக எள்ளளவேனும் தென்படவில்லை. சமாதானத்திற்குக் கைம்மாருக யுத்தமேகங்கள் எங்கும் பரவி வருகின்றன. அபாயச் சங்குகள் போர் முரசொலியை முழக்குகின்றன. இந்நிலையில் மூன்ருவது மகாயுத்தம் இன்றையோ நாளையோஎன மக்கள் பீதியடைகின்றனர்.

நிரந்தரமானதும், உண்மையானதுமான சமாதானம் ஏற்படவேண்டுமாயின் உலகில் இன்று காணப்படும் சீர்கேடானநிலை மாறல் வேண்டும். மக்களிடையே நிலவும் ஊழல்கள் களைந்தெறியப்படல் வேண்டும், முதலாளி–தொழிலாளி பிணக்குகள் அறவே நீங்கி மனிதரிடையே நிலவும் ஜாதிபேதம், நிறத்துவேஷம் என்பன அடியோடொழிதல்வேண்டும் யாவரும் ஒருதாய் வயிற்றினில் பிறந்தவர்கள், யாவரும் ஓர்குலம், யாவரும் ஓர் இனம் என்பதை உலகின் ஒவ்வோர் மனிதனும் தன் சிந்தைநோக்குதல் வேண்டும். மக்களிடையே நீதியும், பிறர்சிநேகமும் திகழவேண்டும். இவையாவும் சுமுகமாக நடைபெற ஒரேயொரு வழியுண்டு. அதுவே நமதாண்டவராகிய யேசு காட்டிய வழியாகும். யேசு போதித்த சத்தியங்களை நாம் விசுவசியாவிடில் உலகில்சமாதானம் நிலவும் என எண்ணுவது பகற்கனவாகும். இதற்குத் தற்போதைய உலகே சான்ருகும். உலக ராஜதந்திரிகள் யேசுவின் பிரதிநிதியாகிய பாப்பானவரை ஏற்றுக்கொள்வதில்லை. அவர் சொல்லுக்குச் செவிசாய்ப்பதில்லை. யேசு காட்டிய வழியில் அவர்கட்கு அக்கறையில்லை. இவ்விதமாய் இருந்துகொண்டும் உலக சமாதானத்தை நாடுகின்ருர்கள்; வழிவகைகளைத் தேடுகின்ருர்கள்.

மன்னுயிர்கட்காகத் தன்னுயிரைத் தத்தம் செய்த எமது திவ்விய இரட்சகர் மெய்யாகவே சமாதானத்தின் அரசர். அவர் பிறந்தவுடனே அர்ச். லூக்காஸ் தாம் எழுதிய சுவிசேஷம் 2-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் கூறியிருப்பதுபோல் சம்மனசுகள்தோன்றி "உந்நத ஸ்தலங்களிலே தேவனுக்குமகிமையும், பூமியில் நல்மனதுள்ளோர்க்குச் சமாதானமும் உண்டாகுக" என வாழ்த்திசைத்தார்கள். யேசு மரிக்குமுன் தம் பிரிய சீஷர்களுக்குச் "சமாதானத்தை உங்களுடன் விட்டுப் போகின்றேன்" எனத் திருவாய் மலர்ந்தருளினுர். யேசு உயிர்த்தபின் பல தடவைகளில் தமது சீடர்களுக்குத் தோன்றி "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" எனப் பகர்ந்துள்ளார். சமாதானம், சமாதானம் என அவர் வாயினுல் சொன்னது மட்டுமன்றி, மனுக்குலத்திற்குச் சமாதானத்தையும் அடைந்து கொடுத்துள்ளார். எப்படியாஞல் ஆதாம் ஏவை பாவத்தினுல் பரமனுக்குப் பரம விரோதியான மனுக்குலத்தை — தேவசாபத்துக் குட்பட்டிருந்த மனுக்குலத்தைத் தமது சிலுவையினுலும், கொடிய சிலுவை மரணத்தினுலும் மீட்டு இரட்சித்துப் பரம பிதாவுடன் சமாதானம்பண்ணியவர் எமது இரட்சகராகிய கிறீஸ்துதாமே. ஆகவே, இந்தச்சமாதானத்தின் அரசரை எமக்குப் பெற்றுத் தந்தவள் எமது மகிமைக்குப் பாத்திரமான அர்ச். கன்னிமரியம்மாளே யாகும். அத்துடன் நில்லாது மனுக்குல இரட்சணியமாகிய பேரலுவலில் தன் திருக்குமாரனுடன் ஒன்றித்துழைத்தாள் எம் அரும் அன்னை. இதனுலேயே எமது திருச்சபையானது அவவுக்கு முற்றும் பொருத்தமான "சமாதானத்தின் இராக்கினியே" எனும் பெயரிட்டு அழைக்கின்றது.

மேலும் உலகமேதாவிகள் சமாதானத்திற்கு உழைட்பதை விடப் பன்மடங்கு அதிகமான விதமாய் எமது அதிபரிசுத்தஅன்னை உழைத்துவருகின்ரு. யுத்தத்தால் அல்லலுறும் உலகிற்காக ஓயாது தேவனிடம் பரிந்துபேசுகின்ரு. சமாதானத்தை நிலைநாட்ட உதவும் எத்தனங்கள் செபம், தபம் என்பவைகளே எனப் பலதடவைகளில் எடுத்தியம்பியுள்ளா. அன்ருருநாள் பாத்திமாவில் அவ கூறியதாவது: "நான் உங்களுக்குச் சொல்வதை மனிதர் செய்தால் அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுவார்கள்; உலகிற்குச் சமாதானம்உண்டாகும்; யுத்தம் முடிவுக்குவரும்; ஆனுல், கடவுளுக்கு விரோதமாய்ச் செய்யப்படும் பாவங்கள் நிறுத்தப்படா விட்டால் இதைவிட இன்னுமோர் கொடியயுத்தம்தொடங்கும். இதைத் தடுப்பதற்காகத்தான் ருஷியாவை என் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், ஐந்து முதற் சனிக்கிழமைகளில் பரிகாரநன்மை வாங்கி ஒப்புக்கொடுக்க வேண்டுமெனவும் நான் விரும்புகிறேன்; என் விருப்பத்திற்கிசைந்தால் ருஷியா மனந்திரும்பும்; சமாதானம் நிலவும்".

இவையாவும்கட்டுக்கதைகளல்ல, இவைகள் உண்மையில் நடந்தேறிய சம்பவங்கள் என்பதை நாம் அறிவோம். இவ்விதம் அறிந்தும் நாம் எத்தனைவிசை நமது அசதி, அசட்டைத்தனத்தினுல் நம் அன்னை தந்துள்ள இவ்வாயுதங்களை உபயோகியாமல் மோசம்போகின்ருேம். வெள்ளம் வருமுன்னமேயே அணைபோட வேண்டுமென்பதை நினைவுகூர்ந்து, மற்ருெரு கொடிய யுத்தம் வராது தடுக்கவும், நீண்ட சமாதானம் நிலவவும் எமதன்னைமரியை வேண்டிக்கொள்வோமாக! நமது நடக்கையால் உலக சமாதானத்திற்கு அடிகோலுவோம். வர்மம், வைராக்கியம், பழி முதலியவற்றை நீக்கி நம் அயலாருடன் சமாதானமாய் வாழ்வோம். இவ்விதம் வாழ்வோமாயின் எமது திவ்விய இரட்சகர் கூறியுள்ளபடி "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் தேவமக்கள் எனப்படுவார்கள்" எனும் பெயரை நாம் அடைய எமது சமாதானத்தின் இராக்கினி கட்டாயம் அருள்பாலிப்பா.

மனிதரிடையே சமாதானம் நிலவுவதற்குமுன்னதாக எம் ஒவ்வொருவருடையவும்உள்ளத்தில் சமாதானம் நிலவவேண்டும். இந்த இருதய சமாதானம் நாம் உலகில் அடையக்கூடிய அரும்பெரும் திரவியமாகும். சர்வேசுரனுடைய கற்பனைகளை அனுசரித்து, அவருடைய சித்தத்திற்கமைய நடந்தால்ஒழிய நாம் இச்சமாதானத்தை அடைந்து புண்ணிய சாங்கோபாங்கத்தில் வளர முடியாது. ஆகவே, இச்சமாதானத்தைக் கடவுளிடமிருந்து எமக்குப் பெற்றுத்தரும்படி சமாதானத்தின் இராக்கினியான தேவமாதாவை இரந்து மன்ருடிவருவோமாக!

— L. Adrian Croos

## உண்மை நட்பு

(A. V. துரைரட்ணம் — நல்லூர்)

அலெக்சான்டரும் தேவதாசனும் இணைபிரியாச் சிநேகிதர்கள். இருப்பினும் இருவரிடையிலும் பெரும் மனவேற்றுமை இருந்துகொண்டே வந்தது. அலெக்சான்டர் சிலநேரங்களில் மிகுந்த சந்தோஷமாகவும் சில வேளைகளில் மிகுந்த துயரத்துடனும் காணப்படுவான். அவனுடைய முகத்தில் பாலப்பருவத்தில் இருந்த ஒளி இல்லை. ஆனுல், தேவதாசனே எந்நேரமும் சந்தோஷத்துடனேயே இருப்பான்.

இருவரும் ஒன்ருகவே மேல்வகுப்பில் படித்துக்கொண்டிருந்தார்கள். சிறுவயதிலிருந்தே இருவரும் ஒன்ருகப் படித்தவர்கள். இருவருக்குமிடையில்தான் வகுப்பில் போட்டிகள் ஏற்படும். ஒருமுறை அலெக்சான்டர் முதலிடத்தைப் பிடித்தால் அடுத்தமுறை கட்டாயமாகத் தேவதாசன் முதலிடத்தைப் பிடிப்பான். பூசைக்குச் செல்வது திவ்விய நற்கருணை வாங்குவது யாவுமே ஒன்ருகத்தான் இருக்கும்.

இந்நிலை J. S. C. வகுப்பில் மாற்றமடைந்தது. தேவதாசன் முன்னரைப் போலவே படிப்பிலும் பூசை பிரார்த்தனைகளிலும் அக்கறை காட்டினுன். ஆனுல், அலெக்சான்டர் இந்நிலையில் இருந்து மிகவும் மாறிவிட்டான். எக்காரியத்திலும் அக்கறையோ சிரத்தையோ எடுப்பதில்லை. வகுப்பிலும் முதல் இடத்தில் இருந்து படிப்படியாகக் குறைந்துவிட்டான். பூசைபிரார்த்தனைக்குச் செல்வதையும் தேவதாசனுடன் பொழுதுபோக்குவதையும் குறைத்துக்கொண்டான்.

இதற்குக்காரணம் அவனது கேட்ட சகவாசதோஷமாகும். இதனை முதலில் அவ்வளவாகத் தேவதாசன் கவனிக்கவில்லை. ஏதோ சுகவீனம் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டிருப்பதாக எண்ணினுன். ஆனுல், சிலநாட்களின் பின்னர்தான் அலெக்சான்டரின் மாற்றத்துக்குக் காரணத்தை நன்கறிந்தான். அவனுடைய இத்தகைய மாற்றத்துக்குக் காரணம் கெட்ட சகவாசதோஷமேயென்பதை அறிந்தபோது மிகுந்த துயரடைந்தான்.

இந்நிலையில் தேவதாசனைப் படிப்பிக்கும் ஆசிரியரின் விருப்பத்துக்கிணங்க மரியாயின் சேனையிலும் அங்கத்தவனுஞன். மரியாயின்சேனையில் நடைபெறும் எல்லாவிதமான கோட்பாடுகளும் அவனுக்குப்பிடித்திருந்தன. அவைகளைக் கடைப்பிடித்தொழுகி, நன்முறையில் வாழவேண்டுமென்ற இலட்சியமான கொள்கையும் ஏற்பட்டது. தன் சிநேகிதனது போக்கையும் மாற்றியமைக்க வேண்டுமென்ற எண்ணத்துக்குத் தேவதாசன் மரியாயின் சேனையில் சேர்ந்ததும் அங்குள்ள கைப்புத்தகத்தை வாசித்தபொழுது பாவத்தில் அழுந்தித்திரிந்த ஒரு மனிதனைச் சகோதர பாசத்தால் உந்தப்பட்ட சகோதரன் ஒருவன் தேவதாயை மன்ருடியதன் பலனுகத் திருந்திய ஒருமனிதனின் வரலாறு தூண்டுகோலாய் அமைந்தது.



இதனுல், அலெக்சான்டர் மனந்திரும்பி நன்நிலைக்குவரவேண்டுமென்பதற்காகத் தேவதாயாரை நோக்கிப் பக்தியாய்ச் செபிப்பான். அத்துடன் நிற்கவில்லை, தன்முயற்சியையும் பிரயோகிக்கத்தொடங்கினுன். அதனுல்அலெக்சான்டரை அணுகி:"நாம் மோட்சத்தில் நித்தியசீவியத்தை அடையும்பொருட்டே சருவேசுரனுல் உண்டாக்கப்பட்டோம். ஆகையால், நாம் அதற்குரிய வழிவகைகளையே கையாளவேண்டும். அதை விடுத்து ஆத்துமத்துக்குக் கேடான வழிகளில் பிரவேசிக்காமல் நன்மையான விடயங்களிலேயே பிரவேசிக்க வேண்டும்"என வலியுறுத்துவான். இவைகள்எல்லாம் நாராசம்போலவே அலெக்சான்டருக்குப் பட்டது.

வகுப்பிலும் ஏனுதானே வென்றே அலெக்சான்டர் இருப்பான். எக்காரியத்தையும் விரைவில் செய்துமுடிப்பவன் அவ்விதம் முடிக்கமுடியாத சோம்பல் நிலையிலும் சோர்ந்த நிலையிலுமே காணப்பட்டான். வகுப்பில் பொருமை என்பது சிறிதும் இல்லாது எல்லோரும் நல்லமுறையில் படிக்கவேண்டுமென்பதற்காகத் தேவதாயாருக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்தவன் பிறமாணவருடைய சகாயத்துக்குக் காத்துக்கொண்டிருக்க வேண்டியவனுஞன். சிறந்த கருத்துக்கள் அமைந்த புத்தகங்கள் எங்கிருக்கின்றதோவெனத் தேடித்திரிந்து வாசித்து, அதன் உயர்ந்த கருத்துக்களை மற்றைய மாணவருக்கும் எடுத்துக்கூறி, ஆனந்தப்படுபவன் ஒழுக்கத்துக்கு விரோதமான புத்தகங்களுக்காக அலைந்து திரிந்தான். சினிமாப்படங்கள் மூலம் நன்மையிலும், தீமையே அதிகரிக்கிறது எனக்கூறியவன் வரும் ஒவ்வொரு புதுப்படங்களையும் தவறவிடாதவனுகிவிட்டான்.

இவைகளால் கவலையடைந்த தேவதாசன் அவனில் மாற்றமில்லாமைகண்டு, மிகமனத்துயரடைந்தான். அலெக்சான்டரின் கடுகடுப்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தச்சனின் குமாரன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோரும் தங்களுடையவேலைகளை நன்றாகச்செய்யுமிடத்து, வாழ்க்கை இன்பமாகின்றது. ஆகவே, நாம் சகல தொழிலாளரையும் நமது ஊழியர்களைத்தானும் மதித்துநடக்கவேண்டும். ஒருபோதுமே அவர்களைத் தாழ்வுபடுத்தி அலட்சியஞ்செய்யப்படாது. அவர்கள்பெறும் சம்பளத்தைக் கொண்டு அவர்களுடைய யோக்கியதையை முடிவுகட்டப்படாது. நசரேத்தின் தச்சுத்தொழிலாளி தேவனுயிருப்பாரோவென்று எவருமேசந்தேகியாததுபோலத் தாழ்மையானவேலைசெய்கிறமக்களில்சிலர் தேவனுடையமதிப்பில் எம்மைக்காட்டிலும் அதிகம் உயர்ந்தவர்களாய் இருக்கலாம்.

யேசுவின்கடுமையான வேலையின் போது அவருடைய ஆத்துமத்தை ஆராய்ந்துபார்ப்போம். திரும்பத் திரும்ப அவர் தம்முடையபிதாவின் திருச்சித்தத்தையே நினைக்கின்றார். தமதுஇருதயத்தில் அவர் தமதுபிதாவைப் போற்றிப்புகழுகின்றார். ஆராதித்துவணங்குகின்றார். அவருக்கு நன்றியறிந்ததோத்திரம் செலுத்துகின்றார். நமதுபாவங்களுக்கு மன்னிப்புக்கோருகின்றார். வேலைக்கஷ்டங்களையெல்லாம் தம்முடைய பிதாவுக்கு ஒப்புக்கொடுக்கின்றார். இதனைத்தான் சர்வேசுரனுடன் ஐக்கியப்பட்டிருத்தலென்று அழைப்பது. நாமும் நமது வேலையில் சர்வேசுரனுடன் ஐக்கியப்பட்டிருக்கலாம். நம்முடைய சாதாரணகடமைகளைச் செய்வதன் மூலம் நாம் திவ்வியயேசுவுக்குஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொடுக்கலாம்.

---

## ருஷியாவுக்குப் பேராபத்து செஞ்சீன

"மேல்நாடுகளிலிருந்து வரக்கூடிய அபாயங்களைக்காட்டிலும் செஞ்சீனவிலிருந்தே ருஷியாவுக்கு வரலாமென்பதை ருஷியர்கள்உணர்ந்து இதுவிஷயமாய் உற்சாகமாய் இருக்கவேண்டு" மென்று பிரித்தானியதேச பிரபல சரித்திராசிரியரான திரு. ஆர்னல்ட் டொயின்பீ அவர்கள் அன்றுநியூயோக் நகரிலே அமெரிக்கமக்களுக்கு அளித்த ரெலிவிஷன்பேட்டியில் கூறியிருக்கின்றார். "செஞ்சீனவின் முன்னேற்றம் ருஷியாவை ஒருபுதியசூழ்நிலைக்கு உள்ளாக்கிவிடும்; ருஷியாவும், மேல்நாடுகளும் கூட்டாகச்சேர்ந்து உலகின் பின்தங்கியநாடுகளை அபிவிருத்திசெய்ய உதவிசெய்யவேண்டும்; ருஷியாவும் சிறுபான்மை வளம்பொருந்திய நாடுகளில் ஒன்றே; ஆகவே அது எம்முடன் சேர்ந்தததானே" என்றும் அவர்கூறலாயினர்.

---

## நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதய இரக்கத்தினும், பரி. சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார், அர்ச். செபஸ்தியார் என்பவர்களின் மன்றாட்டினாலும் நான் கேட்ட காரியம் அனுகூலமானதையிட்டு நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

மாதாவின் ஊழியன்.

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயஇரக்கத்தினாலும் வேளாங்கண்ணிமாதா, அர்ச். மரியகொறற்றி, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினாலும் என்பேரில் சுமத்தப்பட்ட பொய்க்குற்றம் நீங்கியதற்கு நன்றியறிதலாகப் பிரசுரிக்கிறேன்.

பி. இ. மரியதாஸ்

---

● ஜான்செனியுஸ்மேற்றிராணியார் (1585-1638) பதிதம்ஒன்றுக்குத் தம்முடையபெயரை இடலாயினர். அதுதான் "ஜான்செனிஸம்" என அறியப்படுகிறது. ஆனல், அவர் ஒருகத்தோலிக்காரகவே [illegible] ராகவே [illegible]

---

## இந்தியாவிலிருந்து நாம் புதிதாக வரவழைத்திருக்கும் கத்தோலிக்க புத்தகங்கள்

| | | ரூ. ச. |
|---|---|---|
| என் விசுவாசம் | ... | 4-00 |
| அதிசய அன்னை அமலமரி | ... | -50 |
| இதுதான் கருத்தடை | ... | -75 |
| பாடுகளின் பாதையிலே | ... | -80 |
| நம் சேசு | ... | -60 |
| நடுத்தீர்வை உலா | ... | -25 |
| ஊழியர்களின் மாதா | ... | 1-50 |
| வாழவிடுங்கள் | ... | -40 |
| தி. மு. க. வழிகாட்டிகள் | ... | -35 |
| திராவிட இயக்கங்களும் கத்தோலிக்கமும் | ... | -55 |
| சுயபரித்தியாகம் | ... | 1-00 |
| ஞான உணர்த்துதல் | ... | -60 |
| மறுகிறீஸ்து | ... | -45 |
| புதுமை வள்ளல் புனித அந்தோனியார் | ... | -60 |
| தவறி விழுவோர்க்கு ஊன்றுகோல் | ... | -25 |
| அர்ச் அந்தோனியார் மலர் | ... | -35 |
| வாழ்விக்கும் வள்ளல் | ... | 2-50 |
| செந்துகில் | ... | 1-65 |
| சொற்கடந்த சுந்தரி | ... | 2-00 |
| **நாடகங்கள் :** | | |
| டோமினிக் சாவியோ | ... | -65 |
| சமுதாயத் துரோகி | ... | -50 |
| சமாதானம் சௌபாக்கியம் | ... | 1-25 |
| உடைபடா முத்திரை | ... | -15 |
| மதலேனளின் ஏக்கம் | ... | -50 |
| பலித்த கனவு | ... | 1-25 |

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 2739**

கரம்பன்

1. K. கந்தையா
2. பெண் மீனாட்சிப்பிள்ளை
—வழக்காளிகள்

எதிராக

நாரந்தனை

B. சவிரிமுத்து சூசைப்பிள்ளை
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2739-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960-ம் ஆண்டு வைகாசி மீ 28-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1678-75 சதமும் ரூபா. 1000/- க்கு 4-3-59 தொடக்கம் 29-6-59 வரை 15 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 187|65. இதில் ரூபா 1500/- 6-2-60லும், 15-2-60 லும் கட்டப்பட்டது· கோட்டுச் செலவில் ரூபா 100/- கொடுபட்டது.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோவிற்பற்று கரம்பனிறை வடக்கு நுனிக்குப் பக்கமாய்ப் பர. நெ. இல. 29½—இதில் வடபாகத்தில் பர. நெ. இல. 3½ நீக்கிமிகுதி தென்பாகத்தில் பர. நெ. இல. இருபத்தாறு (பர. நெ. இல. 26) எல்லை: கிழக்கு—சீமான் பெண் திரேசம்மாவிற்குரியவாதனம். வடக்கு—ஆறுமுகம் சோனமுத்துவிக்கும், பீற்றர் பெண் மெனிக்காவிற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு—தம்பிையயா பெண் இராசமணிக்குரியவாதனம். தெற்கு—சவரிமுத்து பெண் தங்காசத்திற்குரிய வாதனம். இதடங்கலும் இதன்பதிவு C. 188-140.

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்.

காரைநகர்,
1960-ம் ஆண்டு சித்திரை மீ 16-ம் திகதி.

---

## அறிவித்தல்

வெட்டுக்காட்டில் பத்து (10) ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கிருக்கிறது. தேவையானோர், கீழ்க்காணும் விலாசத்துக்குஎழுதி விபரங்களை அறிந்துகொள்ளவும்.

விலாசம் :

சி. கனகரத்தினம், 52-ம் நம்பர்வீடு,
3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

---

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 30-ம் தேதி சனிவாரம் பி. ப. 4 மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். கூட்டமுடிவில் பங்குத்தலைவர்கள் சங்கம் நடைபெறும்.

இங்ஙனம்,
A. S. Francis OF Mary,
சபைக் கர்த்தருக்காக.

---

## நன்றியறிதல்

திவ்விய பாலனின் இரக்கத்தினாலும், பரி. சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்களின் மன்றாட்டினாலும் நான் கேட்டகாரியம்அடையப்பெற்றேன். இவர்கள் நாமம் எங்கும் புகழப்படுவதாக

யோ. கி.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 2922**

1. காரைநகர் தற்பொழுது இலங்கை றெயில்வே நீர்கொழும்பு, நாகமுத்து சதாசிவம்.
2. மேற்படியூர் பெண் அன்னம்மா
—வழக்காளிகள்

எதிராக

1. காரைநகர் வடக்கு, செல்லாச்சிப்பிள்ளையின் ஆதனங்களின் பிரதிநிதி காரைநகர் மேற்கு பயரிக்கூடல் கந்தப்பு ஆறுமுகம்.
2. காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை C. கந்தப்பர் அருளம்பலம்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2922-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960-ஆண்டு வைகாசி மீ 18-ந் உ புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 2,453-00. ரூபா 2,000-க்கு 14-7-59 தொடக்கம் 23-11-59 வரை 8 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா. 262-03 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைநகர்க் கோவிற்பற்று வலத்தலையிறை "இத்திப்புலம்" பர. நி. இல. பத்தரை (பர. நி இல. 10½) பனைகள், வடலிகள், செய்பயிர், வாண்பயிர்களும், வீடும், கிணறும் எல்லை: கிழக்கும்,வடக்கும்—ஒழுங்கை. மேற்கு—ஒழுங்கையும், இராமனாதர் ஆறுமுகத்தினுதனம். தெற்கு—ஆறுமுகம் பூபாலபிள்ளைக்குரிய வாதனம். இதடங்கலும் இதன் பதிவு C. 304-44.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர்,
1960-ம் ஆண்டு சித்திரைமீ 31-ந் திகதி.

---

## 25-ம் வருட மரண ஞாபகம்

வல்வெட்டித்துறை அர்ச். செபஸ்தியார் கோவிலுக்குச்சேர்ந்த திரு. தொம்மைப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை அவர்கள் இவ்வுலகைவிட்டு மறைந்த 25-ம் வருடம் இம்மாதம் 30-ம் திகதியுடன் பூர்த்தியாகின்றது. அன்றுதினம் அர்ச் செபஸ்தியார் கோவிலில் ஒரு துக்கப்பாடற்பூசை நிறைவேறும்.

இதைக் கண்ணுறும் கிறீஸ்தவர்கள் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாக வேண்டுகின்றோம்.

தொ. தம்பிராசா, பாரியார்,
பிள்ளைகள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 2668**

காரைநகர் கிழக்கு
வே. காத்திகேசு கந்தையா
—வழக்காளி

எதிராக :

1. காரைநகர் மேற்கு வேலுப்பிள்ளை குமாரசாமி.
2. ஷை யூர் வேலுப்பிள்ளை கைம்பெண் சின்னச்சிப்பிள்ளை.
3. ஷை யூர் கணபதிப்பிள்ளை கந்தப்பு
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2668-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1960-ம் ஆண்டு வைகாசி மீ 21-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பதுமணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 4252-50-ம் ரூபா 3000/-க்கு 27-1-56 தொடக்கம் 20-10-59 வரை 10 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 485-22 சதம்.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு மேற்கிறை "நம்பாலை" பர. நெ. இல. ஏழு (பர. நெ. இல. 7) பனைகள் வடலிகளும். எல்லை : கிழக்கு—கார்த்திகேசு முருகேசுவிற்குரிய வாதனம். வடக்கு—ஒழுங்கையும், கந்தையா வேலுப்பிள்ளைக்குரிய வாதனமும். மேற்கு — சுப்பர் வேலுப்பிள்ளைக்குரிய வாதனம். தெற்கு — முருகேசு பெண் காமாட்சிக்குரியவாதனம்.

2. ஷை யிறை "திருநந்தாவயல்" பர. நெ இல. ஒன்பது—(பர. நெ. இல. 9) எல்லை: கிழக்கும், தெற்கும்—நல்லதம்பி பெண் மீனாட்சிக்குரியவாதனம். மேற்கு—முருகர் வேலுப்பிள்ளைக்குரியவாதனம். வடக்கு—சோமநாதர் ஆறுமுகத்துக்குரியவாதனம்.

3. ஷை யிறை "வியாவில்" பர. நெ. இல. பதினறு (பர. நெ. இல. 16) பனைகள், வடலிகள், தென்னைகளும் மற்றும் பயிர்வகைகளும், வீடுகளும், கிணறும். எல்லை : கிழக்கு — ரோட்டு. வடக்கு—நாகேசு பெண் தில்லைநாயகத்துக்குரிய வாதனம், தற்பொழுது மயில்வாகனம் பெண் சிவயோகத்திற்குரிய வாதனம். மேற்கு—ஆறுமுகம் பெண் தெய்வானைக்கும் மறுபேர்கட்குமுரிய வாதனம். தெற்கு—நமசிவாயம் பெண் நாகம்மாவிற்கும், பொன்னையா பெண் முத்துப்பிள்ளைக்குமுரியவாதனம்.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர்,
1960-ம் ஆண்டு சித்திரை மீ 31-ந் திகதி.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, April 28-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org